Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் ‍ ‍ ‍ யாழ்ப்பாணம் சோபகிருது வைகாசி 4 துல்ஹஜ் 23 (18-5-63) சனிக்கிழமை இதழ் 97

# 'பட்ஜட் வரை நேரடி நடவடிக்கை இல்லை

## இயக்கம் ஆரம்பித்தால் அரசாங்கம் உயிர்தப்பும்'

## கோப்பாய் எம்.பி. விளக்கம்

யாழ்ப்பாணம், சனி

"இன்றுள்ள நிலைமையில் தமிழரசுக் கட்சி நேரடி போராட்டம் ஒன்றை ஆரம்பித்தால், கவிழும் நிலையிலுள்ள அரசாங்கத்தை மறைமுகமாக ஆதரிப்பதாகவே அது அமைந்துவிடும். போராட்டம் ஆரம்பித்தால் அரசாங்கம் அதைத்தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு தமிழரசுக்கட்சி எம். பி.க்களைத் தடுப்புக் காவலில் வைத்து வரவு-செலவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதுடன் தொடர்ந்து ஆட்சியிலுமிருக்கும்."

இவ்வாறு கோப்பாய் எம். பி.யும், தமிழரசுக் கட்சிப் பிரமுகருமான திரு. எம். பாலசுந்தரம் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்துடன் அரசாங்கத்தை முறியடித்து விடலாமென்ற நம்பிக்கை மக்களிடையே வலுப் பெற்று வரும் இச்சமயத்தில் போராட்டம் நடத்துவதால் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை என்றும் திரு. பாலசுந்தரம் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

### ஆட்சியில் நீடித்துவிடும்

அரசாங்க கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் சமபலமுள்ள இந்த நேரத்திலே போராட்டம் ஒன்று ஆரம்பித்தால், அரசாங்கம், உடனே 16 தமிழரசுக் கட்சி எம். பி.க்களையும் தடுப்புக்காவலில் வைப்பதன் மூலம், வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றுவது மட்டுமன்றி, தொடர்ந்து தன் ஆட்சிக் காலம் முடியுமட்டும் ஆட்சி நடத்தும்.

### அரசாங்கத்தை வீழ்த்தவேண்டும்

தமிழ்ப் பேசும் மக்களுக்கு அநீதி செய்யும் எந்த அரசாங்கத்தையும் வீழ்த்த வேண்டியதுதான் எங்கள் குறிக்கோள். போராட்டத்திலும் பார்க்க, வாக்குரிமையினுல் ஒரு அரசாங்கத்தை விழுத்துவதுதான் மிகவும் சுலபம். இந்த நல்ல சந்தர்ப்பத்தை கைவிடாது, எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து அரசாங்கத்தை வரவு செலவு திட்டத்தில் தோற்கடிக்க வேண்டும்.

அரசாங்கமே ஆட்டம் கண்டிருக்கும் இந்த நேரத்திலே, போராட்டம் ஆரம்பிப்பதால் சிங்கள கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்துவிடும். அதன் பின் தமிழர்களின் நிலைமை படுமோசமாகிவிடும். போராட்டத்தை காரணம் காட்டி, பல எதிர்க்கட்சி எம்.பிக்கள் அரசாங்கத்தில் சேரவும் கூடும். இதனல் பிரச்னைகள் தொடர்ந்து கொண்டே போகும்.

அண்மையில் உருவாகிய இடதுசாரி ஐக்கிய முன்னணி வட கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் போராட்டம் ஆரம்பித்தால் அவர்களும் தங்கள் கொள்கையை மாற்றி விடுவார்கள். ஆதலால் வரவு செலவு திட்டம் பாராளுமன்றத்தில் வாக்கெடுக்கப்படும்வரை போராட்டம் ஆரம்பிப்பதால் ஒருவித பயனும் ஏற்படப் போவதில்லை.

மன்னரில் இன்று தமிழரசு கட்சி செயற்குழு கூடினலும், ஆவணி மாதத்திற்கு முன் எந்தவித போராட்டமும் ஆரம்பிக்கப்படமாட்டாது என்பதே எனது கருத்து.

## மண்டலத் தொடர்பு ரஷ்யா இழந்தது

மாஸ்கோ, மே 17

"மார்ஸ் — 1" என்ற மண்டலத் தொடர்பு நிலையத்துடனை தனது வானெலித் தொடர்பை ரஷ்யா இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'மார்ஸ்-1' என்ற மண்டலத் தொடர்பு நிலையம் பன்னிரண்டு கோடியே இருபது லட்சம் மைலுக்கப்பாலிருந்து தகவல்களை வெளியிட்டதென்றும் இந்த நிலையம் தற்பொழுது செவ்வாய் மண்டலத்திலிருந்து சுமார் அறுபத்தெட்டு லட்சம் மைலுக்கப்பால் இருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச்மாதம் 21-ம் திகதி இத்தொடர்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டது. தொடர்பிழந்ததனது மண்டலத் தொடர்பு நிலையமான 'மார்ஸ் - 1' உடன் வானெலித் தொடர்பு கொள்ள ரஷ்யா முயற்சிகள் எடுத்துவருகின்றன.

## பிரதமரின் வாழ்த்துச் செய்தி

கொழும்பு, வெள்ளி

நார்வேயின் தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா நார்வே பிரதம மந்திரிக்கு வாழ்த்துச் செய்தியனுப்பியுள்ளார்.

## வெள்ளத்துக்கு 21 பேர் பலி

லண்டன், மே. 17

வடக்கு ஈரானில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினல் இதுவரை 21 பேர் மரணமானர்கள். ஆயிரக்கணக்கானவர்கள் வீடிழந்துள்ளனர். வீதிகள் போக்குவரத்து பல இடங்களில் துண்டிக்கப் பட்டுள்ளன.

## பாடசாலை சுவீப்புக்கு ஆதரவு இல்லை?

### ஆஸ்பத்திரி சுவீப்பை பாதிக்கும் என்கிறர் சுகாதார மந்திரி

கொழும்பு, வெள்ளி

பாடசாலைகளின் சேவைகளை விஸ்தரிப்பதற்கும் அதிகமான ஆசிரியர்களை நியமிக்கும் பொருட்டும் "பாடசாலை சுவீப்" ஒன்றை ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்கும்படி கல்விமந்திரிஜனுப் பதியுதீன் மஹமூத் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

பாடசாலைகளில் நல்ல சேவைகளைச் செய்யும் பொருட்டு உடனடியான சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது. பாடசாலைகளின் சேவைகளை விஸ்தரிக்கும் பொருட்டும் நாட்டிலுள்ளபாடசாலைகளில் தோன்றியிருக்கும் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்கி, தேவையான ஆசிரியர்களை நியமிக்கும் பொருட்டும் "பாடசாலை சுவீப்" ஒன்றை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. இந்தச் 'சுவீப்'பை ஆரம்பிததால் பாடசாலைகளை எதிர் நோக்கியுள்ள சில உடனடியான பிரச்னைகளைத் தீர்த்துவிடலாம். ஆகையால் 'பாடசாலை சுவீப்' ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என்று கல்விமந்திரி ஜனுப் பதியுதீன் மஹமூத் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

தற்பொழுது 18,000 ஆசிரியர்கள் தேவைப்படுகிறர்கள் என்றும், உடனடியாக 9,000 ஆசிரியர்களின் சேவை தேவைப்படுகிறதென்றும் கல்விமந்திரி தெரிவித்துள்ளார். பாடசாலைகளுக்கென சடந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க இந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதி சிறிது கூடுதலாகவே இருக்கிறதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"பாடசாலைசுவீப்" நடத்துவதென்ற கல்விமந்திரியின் யோசனையை, சுகாதாரமந்திரி செனட்டர் ஏ. பி. ஜயசூரியா ஆட்சேபித்துள்ளார். பாடசாலைகளுக்கென 'சுவீப்' ஒன்று ஆரம்பித்தால், ஆஸ்பத்திரி சுவீப் வாங்குபவர்களின் தொகை குறைந்துவிடுமென்று சுகாதாரமந்திரி தெரிவித்துள்ளார்.

ஆஸ்பத்திரி சுவீப்பை விஸ்தரித்து அதில் கிடைக்கும் நிதியில் ஒருபகுதியை பாடசாலைகளுக்கென ஒதுக்குவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்துவருவதாகத் தெரிய வருகிறது

## மன்னரில் இன்று தமிழரசு கட்சி செயற்குழுக் கூட்டம்

### அரசியல் சூநிழ்லைபற்றி ஆராயும்

மன்னர், வெள்ளி

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் 18-ம் திகதி சனிக்கிழமையும் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம், மூதூர் எம். பி. ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி, இலங்கைத் தொழிலாளர் கழக உப-தலைவர் திரு. இராமன் ஆகியோர் இன்று மன்னர் வந்துசேர்ந்தனர்.

மூன்று தினங்களிலும் மன்னர், எருக்கலம்பிட்டி, உயிலங்குளம் ஆகிய இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(5-ம் பக்கம் பார்க்க)

## மாத்தறையில் பிரதமர்

கொழும்பு, வெள்ளி

மாத்தறையில் இன்று குழாய்த் தண்ணீர் திட்டமொன்றை பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா திறந்து வைத்தார். மக்கள் வங்கிக் கிளையொன்றையும் திறந்துவைத்தார்.

## அரசாங்க கேள்விப் பத்திரங்கள்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 1075—செங்கலடி உப-பிரிவில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மதுரங் கேணிக் குளத்து பாதை மதகுகள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் 11-6-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

என் 1076— செங்கலடி உப-பிரிவில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உன்னிச்சை வலது கை வாய்க்கால் அமைப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

இதன் முழுவிபரங்களுக்கும் 17-5-63இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 2-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள் கந்தோர்களிலும், தபாற்கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

குடிநிலம் 5 1/2 பரப்பு விற்பனைக்கிருக்கிறது. திருநெல்வேலி கிழக்கு ராமலிங்கம் ரோட்டில். கிணறு, மின்சார வசதிகளுண்டு. காணியை இரண்டாகப் பிரித்தும் கொடுக்கலாம். விபரங்களுக்கு, டாக்டர் இராசையா, உரும்பிராய். 990

### வாடகைக்கு

ஸ்டான்லி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேல் மாடிக்கட்டடத்தில் ஸ்டுடியோ, காரியாலயம் போன்றவைக்கு உகந்த வசதியான இடம் வாடகைக்கு உண்டு. நேரில் காணவும்: கணேஷ் அன்கோ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 992

### விற்பனைக்கு

ஒரு ஸ்ரீ தொடர்பு இலக்கமுடைய றினோல்ட் டோர்பின் கார் விற்பனைக்குண்டு. விலை ரூபா 8000 அல்லது பெறுமதியான விலை.

C/o அரியகுட்டி, 5-ம் கட்டை கோப்பாய்-மானிப்பாய் வீதி. 996

### தேவை

எமது தொழிற் சாலையில் கடமையாற்ற ஆண்களும் பெண்களும் தேவை. விஞயகம் இன்டஸ்றீஸ், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 997

### தேவை

**நவாலி ப. நோ. கூ. சங்கம்**

20—45 வயதுக்குட்பட்டவரும் S. S. C. தராதரம் பெற்றவருமான ஒரு நிருவாகக் காரியதரிசி தேவை 25-5-63க்குப் பிந்தாமல் ஷை சங்கத் தலைவருக்குப் பதிவுத் தபால் மூலம் மனுச்செய்துகொள்ளவும். அனுபவ நற்சாட்சிப்பத்திரங்கள் இணைக்கப்படவேண்டும். பிணைப்பணம் ரூ. 1000 ஆதனப்பிணை ரூ. 3000. மாத வேதனம் ரூ. 75. தலைவர், ப. நோ. கூ. சங்கம், நவாலி, மானிப்பாய். 998

### தேவை

சினிற்ரேன்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்திற்கு இன்ஸ்பெக்டர், பிரதிநிதி, லிகிதர் பதவிகளுக்கு ஆங்கிலம் எஸ். எஸ். ஸி., ஜே. எஸ். ஸி. க்குக்குறைவில்லாத கல்வித் தகைமையும், தட்டெழுத்துப் பயிற்சியும், ரொக்கப் பிணையும் செலுத்தக்கூடிய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முடிவுத்திகதி: 30-5-63. முகவரி சினிற்ரேன்ஸ் லிமிட்டெட், இராசா கட்டடம், பெரியகடை யாழ்ப்பாணம். 999

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநாத்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

# தேநீர்க்கடைப் பிரவேசத்துக்கு பாராட்டு

மானிப்பாயிலுள்ள தேநீர்க்கடைகளில் தீண்டாமை ஒழிப்பினை நிறைவேற்றிச் சிறுபான்மைத் தமிழருக்குச் சமத்துவம் நல்கிய பெரும் பணியினைச் செய்த உடுவில் மக்கள் முன்னேற்ற மன்றத்தினருக்கும் அப்பணியினை முன்னின்றுநடத்தியே திரு. சி. கதிரவேலுப்பிள்ளை செனற்றர் நல்லையா எனும் பெருமக்களுக்கும் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். இப்பெருந் தொண்டர்களுக்கு எமது தமிழ்மறைக் கழகத்தின் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். எமது தமிழ்மறைக்கழகத்தின் குறிக்கோள்களுள் ஒன்று தீண்டாமை பாராட்டுதலை ஒழித்தலாகும். இதுவே தலையான குறிக்கோள் எனவுங் கூறலாம். நம் மக்கள் அறியாமையாலும், ஆணவத்தாலும், அதிகார ஆசையாலும் சாதி வேற்றுமைகளைப் பாராட்டித் தீண்டாமையைப் போற்றி நம் இனத்தின் வாழ்வைப் பாழாக்கி வந்தமையைக் கண்டு துடிதுடித்தே இச்சமுதாயக் கொடுமைகளை நீக்குவதற்குத் திருக்குறளின் கருத்துக்களை மக்கள் உள்ளத்தில் பதிக்க எண்ணிப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்மறைக் கழகத்தை நிறுவினோம்; ஒல்லும் வகையால் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரஞ் செய்தோம். இப்பொழுது மக்களிடையே நல்லுணர்வும் நற்பண்பும் மலர்ந்து பொலிந்து விளங்குகின்றன என்பதற்கு மானிப்பாயிலுள்ள பல தேநீர்க்கடைகள் சிறுபான்மைத் தமிழருக்குச் சமத்துவம் கொடுக்க முன் வந்தமையே சான்றாகும். இக் கடைகளின் உரிமையாளருக்கும் எங்கள் கழகத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அடுத்த மாதம் 6-ஆம் நாளாகிய வியாழக்கிழமை திருவள்ளுவர் திருநாளாகும். இந்நாளன்று சிறுபான்மைத் தமிழருக்கு இன்னும் சமத்துவம் நல்காத தேநீர்க் கடைகளும் உணவு விடுதிகளும் மானிப்பாயிலுள்ள கடைகளைப் பின்பற்றி சிறுபான்மை மக்களை அழைத்துச் சமத்துவம் நல்கி விழா எடுத்தலை விடத் திருவள்ளுவருக்குச் செய்யும் பெருஞ்சிறப்பு வேறில்லை. இந்நாளன்று சிறு பான்மைத் தமிழர்களுக்கு இன்னுந் திறக்கா திருக்கோயில்களையும் திறந்து விழா எடுக்க வேண்டுமென்றுந் தமிழ்ப் பெருமக்களை இரந்து கேட்டுக்கொள்ளுகிறோம். ஒவ்வொரூரிலும் இந்த இரு பணிகளையுஞ் செய்வதற்கு அவ்வூர் தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் ஆக்கமும் ஊக்கமும் நல்குவார்களாக. எந்நாட்டிலுஞ் சமுதாயச் சீர் திருத்தங்களைப் புகுத்துவதில் முன்னின்று உழைப்பவர்கள் ஆர்வம் மிக்க இளைஞர்களேயா

(5-ம் பக்கம் பார்க்க)

### குமாஸ்தா தேவை

முல்லைத்தீவிலுள்ள றிப்பியர் கராச் ஒன்றிற்கு மோட்டார் உதிரிப்பாகங்களிலும் அல்லது காட்வேயஸ் ஸ்ரோஸில் கராச் நிர்வாகத்திலும், கணக்குகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பும் செய்யக்கூடிய ஒரு குமாஸ்தா தேவை.

2. வயது 25 க்கு மேற்பட இருத்தல் விரும்பத் தக்கது. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் எதிர்வரும் 19-5-63 காலை 10-00 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் நேரில் பேட்டி காணவும். நம்பர் 5 இராசாவின் தோட்டம் ரோட், யாழ்ப்பாணம். 1101

### அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம், பண்ணைரோட்டில் 70-ம் இலக்கத்தில் அடைவு பிடிக்கும் பொன்னம்பலம் தெய்வேந்திரம் அவர்களிடம் 1-4-60 தொடக்கம் 30-12-61 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாத வைகளை 13-6-63 வியாழக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்,
கோர்ட் கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.

643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம். 1000

### School of Technology, Jaffna
### SCHOLARSHIPS

Two free scholarships at Rs. 50/- per month each are available to **Poor Students** with qualifications suitable for completing the following one year courses:

(a) **Preliminary Examination in Electrical Engineering Practice (City & Guilds, London.)**

(b) **Authorised Draughtsmens, Examination (Suryeyor General)**

Applications are invited before 1-6-63. For further particulars, apply to:

Director.
1103

### ஜூன் முதல் ஆசிரியர் இடமாற்றம்

கொழும்பு, வெள்ளி

சகல ஆசிரியர்களின் இடமாற்றமும் இந்த வருடம் ஜூன் மாதல் முதல் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

சமீபத்தில் கல்வி இலாகாவில் நடைபெற்ற உதவி வித்தியாதிபதிகளின் மகாநாட்டிலேயே மேற்கண்ட முடிவு செய்யப்பட்டது.

மே மாதம் முதல் திகதியிலிருந்து இடமாற்றம் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்தது.


## எஃப். ஜீவாஜி சகோதரர்கள்

மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும் பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப் பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பேனை, பலவிதமட்டைகள், சோடனைக் கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**எஃப். ஜீவாஜி சகோதரர்கள்,**
ஜூபிலி பஜார், இலக்கம் 9, (ராணி சினிமாவுக் கருகில்)
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்: ஜீவாஜி சகோதரர்கள், 50, புதிய சோனகத்தெரு, கொழும்பு-12
கிளை: இன்டிப்பென்டன் ரேடிங்கொம்பனி, 51A, 1ம்குறுக்குத்தெரு, கொழும்பு-11
தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12.
1008



## மாமைட் எனக்கும் என் குடும்பத்துக்கும் நற்சுகமும் பெலனும் தருகிறது.



நாம் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறோம் அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறோம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒருபாகமாக நீங்கள் மாமைட் தினசரி அருந்திவர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மைமாட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும்பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




# மாமைட்

# "ஜம்மு காஷ்மீர், லடாக் பள்ளத்தாக்கை பாகிஸ்தான் கோருகின்றது"

—சுவர்ண்சிங்

# "சுற்றுப்பேச்சுகள் இனியில்லை; கருத்துவேற்றுமை நிறையஉண்டு"

—புட்டோ

## சமாதானத்துக்கு உறுதி; ஆனல் அறிக்கையில் சேர்க்க மறுப்பு

புதுடில்லி, மே 17

ஜம்மு காஷ்மீர் லடாக் பள்ளத்தாக்கு பகுதிகள் தங்களுக்கு வேண்டுமென்று பாகிஸ்தான் தரப்பினர் கோரினர் என்றும் காஷ்மீர் மற்றும் அதுசம்பந்தமான இதரபிரச்னைகளையும் சமாதானமாகத் தீர்த்துவைக்க பர்கிஸ்தான் தொடர்ந்து முயற்சி செய்யுமென்று பாகிஸ்தான் வெளிவிவகாரமந்திரி திரு. புட்டோ கருத்துத் தெரிவித்திருந்தாரென்றும் ஆனல், புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் வெளியான கூட்டறிக்கையில் அந்தக் கருத்தைச் சேர்க்க திரு. புட்டோ மறுத்துவிட்டார் என்றும் பாரத கோஷ்டியின் தலைவரான இந்திய ரயில்வேமந்திரி சர்தார் சுவர்ண்சிங் தெரிவித்துள்ளார். பாரத-பாகிஸ்தான் சுற்றுப் பேச்சுகள் இனிமேல் தொடர்ந்து நடைபெற மாட்டாது என்றும் புதுடில்லியில் நேற்றுடன் முடிவடைந்த ஆருவது சுற்றுப்பேச்சுக்களே இறுதியானதென்றும் பாகிஸ்தான் கோஷ்டியின் தலைவரும் பாக். வெளிவிவகார மந்திரியுமான புட்டோ தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மற்றும் அதுசம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே மந்திரிகள் கட்டத்தில் நடைபெற்ற ஆருவது சுற்றுப் பேச்சுகள் நேற்று முடிவடைந்தது. புதுடில்லியிலுள்ள ராஷ்டிரபவனில் நடைபெற்ற இப்பேச்சுக்களுக்கு பாரதத் கோஷ்டிக்கு சர்தார் சுவர்ண்சிங்கும், பாகிஸ்தான் கோஷ்டிக்கு திரு. புட்டோவும் தலைமைவகித்தனர்.

### பேச்சுக்களில் உடன்பாடில்லை

நேற்றுக் காலையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது இரு தரப்பிலும் ஆலோசகர்கள் கலந்து கொண்டனர். கடந்த புதன்கிழமை ஆரம்பமான பாரத-பாகிஸதான் பேச்சுக்கள் நேற்றுடன் இரண்டுநாள் பேச்சுவார்த்தைகளின் பின்னர் முடிவடைந்தது. பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஆருவது சுற்றுப்பேச்சுக்கள் குறித்து வெளியிட்ட கூட்டறிக்கையில், எந்தவிதமான உடன்பாடும் தெரிவிக்கப்படவில்லை.

புதுடில்லியில் நடைபெற்ற ஆருவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், பாரத கோஷ்டியின் தலைவரான இந்திய ரயில்வேமந்திரி சர்தார் சுவர்ண்சிங் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், காஷ்மீர் பிரச்னையைச் சமாதானமாகத் தீர்த்து வைக்கவே பாரதம் விரும்புகிறதென்றும் இந்த முயற்சியை பாரதம் தொடர்ந்து மேற்கொள்ளுமென்றும் கூறினர்.

### தொடர்ந்து முயற்சி

பத்திரிகை நிருபர்களுக்கு சர்தார் சுவர்ண்சிங் மேலும் தெரிவித்ததாவது: "காஷ்மீர் மற்றும் அதுசம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற ஆருவது சுற்றுப்பேச்சுக்கள் இன்றுடன் முடிவடைந்தன. ஆனல் இந்தப் பேச்சுக்கள் இனிமேல் நடைபெறமாட்டாதென்று என்னல் திடமாகக் கூறமுடியாது. உலகில் சமாதானமே நிலைக்க வேண்டும். பிரச்னைகள், தகராறுகள் யாவும் சமாதானமாகவே தீர்க்கப்படல் வேண்டும் என்றுதான் பாரதம் கருதிவருகிறது. ஆகையால் காஷ்மீர் பொறுத்தவரையில் தன்னலான முயற்சிகளை பாரதம் தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நீண்டகாலமாக நிலவிவரும் காஷ்மீர்பிரச்னை சமாதானமாகவே தீர்க்கப்படல் வேண்டும். இந்த விஷயத்தில் பாகிஸ்தானும் ஒத்துழைக்குமென்றே நான் கருதுகின்றேன்.

### ராஜீய தொடர்பு

காஷ்மீர் பிரச்னை குறித்து பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு பாரதமும் பாகிஸ்தானும் சந்திக்கும் வாய்ப்பு இனிமேல் இருக்காதென்று பாகிஸ்தான் கோஷ்டித் தலைவரான பாக். வெளிவிவகார மந்திரி புட்டோ கூறியிருந்த போதிலும், காஷ்மீர் பிரச்னையில் தீர்வுகாணும் பொருட்டு பாரதம் ராஜீயத் தொடர்புகளை மேற்கொள்ளும்.

### "சொல்லொன்று செயலொன்று"

பாகிஸ்தானும் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமென்றும் காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கவே பாகிஸ்தான் விரும்புகிறதென்றும் பாகிஸ்தான் கோஷ்டியின் தலைவரான பாக். வெளிவிவகாரமந்திரி புட்டோ கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனல் புதுடில்லியில் நடைபெற்ற ஆருவது சுற்றுப் பேச்சுகளின் பின்னர் வெளியான பாரத-பாகிஸ்தான் கூட்டறிக்கையில் தமது கருத்தைச் சேர்க்கபாக். வெளிவிவகாரமந்திரி புட்டோ மறுத்துவிட்டார். அவரின்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஜி. ஸி. ஈ. முடிவுகள் திங்கள் வெளியாகும்

கொழும்பு, வெள்ளி

சென்ற வருடம் டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற ஜி ஸி. ஈ. பரீட்சையின் முடிவுகள் அடுத்த திங்கட்கிழமை வெளியாகும் என அறியப்படுகிறது, டிசம்பர் மாதப் பரீட்சையில் 155,000 மாணவர் தோற்றினர்.

# "தாழ்வு மனப்பான்மை நீங்க வேண்டும்"

—லால்பகதூர் சாஸ்திரி

புதுடில்லி, மே 17

"தீண்டாமை என்பது மதப் பிரச்னை மட்டுமல்ல அது ஒரு பொருளாதாரப் பிரச்னையும்கூட" என்று உள்துறை மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

தாழ்த்தப்பட்ட சுமார் 200 பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில் திரு. லால் பகதூர்சாஸ்திரி பேசுகையில் தான்மேற்கண்டவாறு கூறினர்

அவர் மேலும் பேசியதாவது:-

"தீண்டாமையென்பது மதப் பிரச்னையால் உருவானதல்ல. பொருளாதாரப் பிரச்னையாலும் தீண்டாமை உருவாகிறது. பொருளாதாரம் திருப்திகரமானதாகவிருந்தால் தீண்டாமை அங்கு நிலவாது. சமத்துவமே அங்கு நிலவும்.

நகரங்களில் தீண்டாமை வெகுவாக மறைந்துவருகின்றது. ஆனல் கிராமப்புறங்களில் தீண்டாமை இனனும் மறையவில்லை. சாதிச் சச்சரவுகளும் சண்டைகளும் நடைபெறுவது தவிர்க்கபபடவேண்டிய விஷயம்.

ஹரிஜனங்களுக்கு போதுமான வசதிகள அளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், ஹரி ஜனங்களுக்கு, குடியிருப்பு [illegible]ங்களும் வேலைவாய்ப்புகளும் அளிக்கப்படும்.

சமூகத்தில் தாழ்வு மனப்பான்மை நீங்கவேண்டும். தாழ்த்தப்பட்டோரும், தாங்கள் குறைந்தவர்கள் அல்ல என்பதை மனதிற்கொள்ளவேண்டும். தேச நலத்தில் அவர்கள் அக்கறை காட்டினல் தாழ்வு மனப்பான்மை மறைந்துவிடும். நாட்டின் முன்னேற்றத்திலும் சமூக நலனிலும் மக்கள் ஈடுபட்டால் தீண்டாமைக்கு இங்கு இடமே இருக்காது."

## முட்டைகளுக்கு உலக விற்பனைத்திட்டம்

லண்டன், மே 17

புரத சத்துக் குறைந்தஇடங்களில் முட்டைகளை விற்பனை செய்வதற்கு உலக முட்டைகள் விற்பனைச் சபையை உண்டாக்குவதற்கான திட்டங்கள் லண்டனில் வகுக்கப்பட்டன. இச்சபை 1964-ம் ஆண்டு இலை உதிர் காலத்தில் ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சபை முட்டைகளை உற்பத்தி செய்யும் பிரதம நாடுகளிலிருந்து முட்டைகளைச் சேகரித்து மேல்மிச்சமானவற்றை விருத்தியடைந்த நாடுகளுக்கு தகுந்த விலைக்கு விற்கலாமா எனப் பரிசீலனை செய்யும்.

லண்டனில் சமீபத்தில் நடந்த கூட்டத்தில் சர்வதேச முட்டை கமிஷன் கமிட்டி தலைவரான திரு. சி. ஆர். ஹரிசனல் இத்திட்டத்தின் விபரங்கள் எடுத்துக் கூறப்பட்டது. இக்கமிட்டியில் 21 முட்டைகள் உற்பத்தி செய்யும் நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

# விண்வெளி வீரர் கூப்பர் பூமிக்கு பத்திரமாக திரும்பினர்

## 34 மணிநேரத்தில் 22தடவை உலகவலம்

கேப்கனவரோல், மே 17

அமெரிக்க விண்வெளிவீரர் மேஜர் கார்டன் கூப்பர், வானவெளிக் கப்பலில் உண்டு, உறங்கி, இளைப்பாறி உலகை 22 தடவைகள் வலம்வந்துவிட்டு நேற்றுப் பத்திரமாக பூமிக்குத் திரும்பினர். வானவெளிக் கப்பலின் நுட்ப இயக்கங்கள் தாமாக இயங்க மறுத்ததன் காரணமாக மேஜர் கூப்பர், வானவெளிக் கப்பலைத் தாமாகவே இயக்கி பூமிக்குத் திரும்பினா.

கடந்த புதன்கிழமை இலங்கை நேரப்படி மாலை 6-34க்கு வானவெளிக் கப்பலில் உலக வலத்தை ஆரம்பித்த அமெரிக்க விண்வெளி வீரர் மேஜர் கார்டன் கூப்பர் 34 மணித்தியாலங்களில் 22 தடவைகள் உலகைச் சுற்றிவிட்டு நேற்று சுகத்துடன் பூமிக்குத் திரும்பினர். 36 வயது நிரம்பியவரும் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையுமான மேஜர் கார்டன் கூப்பர் பூமிக்கு குறிப்பிட்ட இடத்தில் பத்திரமாக இறங்கினர் என்று நேற்று அறிவிக்கப்பட்ட[illegible]ம் கூப்பரின் மனைவி டிரடி [illegible] ஆனந்தக்கண்ணீர் பொழிந்[illegible]. முக்கியமாக அமெரிக்[illegible] மக்கள் எல்லோரும் வா[illegible]னைவிக்கும் டெல்விஷனுக்கும் அருகேதான் கடந்த 34 மணித்தியாலங்களையும் செலவிட்டனர்.

நேற்று பசுபிக் சமுத்திரத்தின்மீது முன்னேற்பாடாக திட்டமிட்ட இடத்தில் கார்டன் கூப்பர் இறங்கியதும் அவரது உடல்நிலை சீராகக் காணப்பட்டது. புன்னகை தவழ்ந்த முகத்துடன் அவர் காணப்பட்டார். வான்வெளிக் கப்பலில் 22 தடவைகள் உலகை வலம் வந்துவிட்டு பூமிக்குத் திரும்பும் சமயத்தில் வான்வெளிக் கப்பலில் பொருத்தப்பட்ட சில நுட்ப இயக்கங்களில் தடை ஏற்பட்டன. அந்தச் சமயத்தில் வீரர் கூப்பர் மிகவும் துணிச்சலாக அக்கப்பலைச் இயக்கிதிக்கொண்டு பூமிக்கு பத்திரமாக இறங்கினர்.

அமெரிக்காவின் வான்வெளி வீரர் ஜோன்கிளனின் ஆலோசனைகளை மிகவும் கூர்மையாக கேட்டு அவற்றைத் தமது மனதில்நன்ருக பதிய வைத்திருந்த தினல்தான் கூப்பரினல் வான்வெளிக் கப்பலைச் வெற்றிகரமாக செலுத்த முடிந்ததென்றும், தானகவியங்கும் கட்டுப்பாட்டு யந்திரத்தில் ஏற்பட்ட பிழைகளை உணர்ந்து கப்பலை இயக்கத் தவறியிருந்தால் கூப்பர் சென்ற வான்வெளிக் கப்பல் எரிந்து சாம்பலாகியிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளிப் பிரயாணிகளில்வயதில் குறைந்தவரான மேஜர் கார்டன் கூப்பரை நேற்று அமெரிக்க ஜனதிபதி கென்னடி சந்தித்து வாழ்த்துக் கூறினர். கார்டன் கூப்பரை பாராட்டும் முகமாக எதிர்வரும் திங்கட்கிழமை வெள்ளை மாளிகையில் விருந்துவைபவம் ஒன்றுக்குத் தாம் ஏற்பாடு செய்திருப்பதாக கூப்பரிடம் கென்னடி கூறியசமயம் "நன்றி நான் நல்ல சுகமாகவிருக்கின்றேன்" என்று கூப்பர் பதிலளித்தார்.

உலகை 22 தடவைகள் வலம்வந்ததன்மூலம் கூப்பர் மொத்தம் ஆறு[illegible] லட்சம்மைல் வரை பிரயாணம் செய்திருக்கிருர். அமெரிக்க வானவெளி வீரர்கள் அனுபவியாத பல கஷ்டங்களை கூப்பர் அனுபவித்தார் என்றும் தமது திறமையினல் கூப்பர் பத்திரமாக பூமிக்குத் திரும்பினர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கூப்பரைப் பாராட்டி பல நாட்டுத் தலைவர்கள் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியுள்ளனர்.

## மணி வாக்கு

உலகத்திலே ஒரே ஒரு மதம் மட்டுமே இருக்க வேண்டும். இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆகவே பல சமயங்களுக்கிடையேயும், பொதுவான அம்சங்களை கண்டு, பரஸ்பர சகிப்புக்கும் சகவாழ்வுக்குமாக முயன்று வருகின்றேன்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு வைகாசி மீ 4உ (18 5-63)


## நிதிமந்திரிப் பதவி

பீக்கிங்கிலே இலங்கையின் தூதரான திரு.ஏ.பி. பெரேரா அவசரமாக இலங்கைக்குத் திருப்பி அழைக்கப்பட்டதிலிருந்து, அவரை நிதிமந்திரியாக நியமிக்க முயற்சிகள் நடப்பதாகவும், ஆனால் அவர் சம்மதிக்க இஷ்டப்படவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. இலங்கையின் இன்றைய பொருளாதார நிலையில் இந்நாட்டின் நிதிமந்திரியாகப் பொறுப்பேற்க யாரும் விரும்பவில்லையாயின் அதில் ஆச்சரியமில்லை. அரசாங்கத்துக்கு நடப்பு வருடத்தில் வரவைவிட செலவு 60 கோடி ரூபாய் அதிகமாகும். இதைச் சரிக்கட்டுவதுடன் அடுத்த வருட வரவு-செலவுத் திட்டத்தையும் தயாரிக்க வேண்டும்.

ஏற்கெனவே நிதிமந்திரியாக இருந்த திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, பங்கீட்டு அரிசியின் அளவைக் குறைக்க வேண்டுமென்று யோசனை கூறி இதற்கு மந்திரிசபையின் அங்கீகாரத்தையும் பெற்றார். பின்னர் எதிர்ப்புத் தோன்றவே அந்த யோசனை கைவிடப்பட்டதுடன், பீலிக்ஸே அப்பதவியை விட்டு விலக வேண்டியதாயிற்று. அதன்பிறகு நிதிமந்திரிப் பதவியை சபைமுதல்வர்சிலகாலம்வகித்து, திரு.கலுகல்லேயிடம்அதைஒப்புவித்தார். பங்கீட்டு அரிசியின் அளவை புதிய நிதிமந்திரி குறைக்கவில்லை எனினும் அரசாங்கத்தின் பணநிலைமையை அவரால் மேம்படுத்த முடியவில்லை. இதற்குமாறாக நிலைமை மோசமாகிவருவதுடன் வாழ்க்கைச் செலவும் அதிகரித்து மக்களிடையே அதிருப்தியும் வளர்ந்து கொண்டு போகிறது.

இந்நிலையை மாற்ற வழி என்ன? நிதிமந்திரிப்பதவிக்கு வேறொருவரை நியமிக்க அரசாங்கக்கட்சி தீர்மானித்திருப்பின் அதில் வியப்பில்லை. ஆனால் ஆளை மாற்றுவதால் மட்டும் நிலைமை மேம்படுமா? இது தலைவலியை நீக்கத் தலையணையை மாற்றுவது போலாகும். வியாதி நாள்பட்டது. மூலகாரணம் தேசிய ஒற்றுமையில்லாததேயாகும். வரவர அரசாங்கக்கட்சி பலம் குன்றி இப்போது நியமன அங்கத்தினர் தயவிலும், சில உதிரிகளின் ஆதரவிலும் அரசாங்கத்தின் ஆயுள் தங்கியுள்ளது. இப்போது ஒரு புதியவரை நிதிமந்திரியாக நியமித்தாலும் அவர் எவ்வளவு திறமைசாலியாயினும் அவரால் நிலைமையைச் சமாளிக்க முடியாது. இந்நிலையில் கட்சி அபிமானத்தைவிட தேசாபிமானமே அவசிய தேவை. எல்லாக் கட்சித் தலைவர்களையும் பிரதமர் துணிச்சலுடன் அழைத்து இன்றைய நெருக்கடியைத் தீர்க்க அவர்களது ஒத்துழைப்பையும் உதவியையும் நாடுவதாயின், நிலைமை மேம்பட நல்ல வழிபிறக்கலாம். அப்படியின்றி நிதிமந்திரிப் பதவிக்குப் புதியவர் ஒருவரை நியமிப்பதால் அவர் எவ்வளவு திறமைசாலியாயினும் பிரச்னை தீருவது சந்தேகமே.

## அவசிய தேவை

காலியிலே ஏற்பட்ட தீவிபத்து யாழ்ப்பாணத்துக்கு ஓர் எச்சரிக்கையாகும். அங்கு தீயணைக்கும் படை இல்லாததால் 70 மைல் தூரத்திலுள்ள கொழும்பிலிருந்தே தீயணைக்கும்படை வர வேண்டியதாயிற்று. அதற்குள் தீயினால் அதிக சேதம் ஏற்பட்டு அரசாங்கக் காரியாலயங்கள் நாசமாகிவிட்டன. காலியில் இப்படை இருந்திருப்பின், சேதத்தைக் குறைத்திருக்கலாம். துரதிருஷ்டவசமாக யாழ்ப்பாணத்தில் இவ்வித விபத்து ஏற்பட்டால் தீயணைக்கும்படை சமீபத்தில் ஏது? இத்தீவிலே கொழும்புக்கு அடுத்தபடியாக பெரிய நகரமாக வளர்ந்துவரும் யாழ்ப்பாணத்துக்கு தீயணைக்கும்படையொன்று அவசிய தேவையாகும். வருமுன் காப்போனாக இருந்து இவ்வித படையை, இங்கு ஏற்படுத்தத் தக்க முயற்சியை மாநகரசபை செய்வதுடன, இதற்கான உதவியை மத்திய அரசாங்கம் செய்யக் கடமைப்பட்டுள்ளது.

# பாரிசவாதம்-இளம் பிள்ளைகளுக்கா?

—டாக்டர் செ. சிவஞானசுந்தரம்—
(சுகாதார வைத்திய அதிகாரி,யாழ்ப்பாணம்)

இளம்பிள்ளை வாத நோயை (Poliomyelitis) இளம்பிள்ளை பாரிசவாதம் என்று அழைப்பதுதான் மிகவும் பொருத்தமானதாகும். வெறும் 'வாதம்' என்று கூறும்போது நோயின் பயங்கரமும் அபாயமும் எமக்குத் தெரிவதில்லை. வாதம் என்னும்போது அவயங்களில் வலி, உளைச்சல், பிடிப்பு, சோர்வு இவற்றைத்தானே குறிப்பிடுகிறோம். ஆனால் இளம்பிள்ளை வாதநோய் (போலியோ) பெரும்பாலான பிள்ளைகளுக்கு நிரந்தரமான பாரிசவாதத்தை உண்டாக்குகிறது. அதாவது கை கால்களை, கழுத்தை ஆட்ட அசைக்க முடியாமல் செய்து விடுகிறது. குழந்தை தனது வாழ்நாள் முழுவதிலும் இன்னும் ஒருவரின் தயவை நாட வேண்டி இருக்கும். வாழ்நாள் முழுவதிலும் மற்றவர்கள் அவரைப் பார்த்து பரிதாபப்படும், ஆச்சரியப்படும், சிரிக்கப்படும் நூதன காட்சிப் பொருளாக இருக்க வேண்டும். வாழ்நாள் முழுதும் கவலை; ஏமாற்றம்; தாழ்வு மனப்பான்மை. வாழ்வா அது.

கொடிய இளம்பிள்ளை வாதம் தனது பெயருக்கு ஏற்ப சிறு குழந்தைகளையே பெரும்பாலும் பாதிக்கிறது. சென்ற வருடம் இலங்கையில் பரவிய இளம்பிள்ளை வாத நோயால் பீடிக்கப்பட்டோரில் 90 சத விகிதமானவர்கள் 3 மாதத்துக்கும் 8 வருடத்துக்குமிடைப்பட்ட வயதுள்ள பிள்ளைகள் என்று அறிகிறோம். கொழும்புக்கு அடுத்தாக யாழ்ப்பாண குடாநாட்டில் இந்நோய் அதிகமாகத் தாக்கியதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இக் கொடிய நோயை அடியோடு ஒழிப்பது ஒரு நாட்டின் தலையான கடமையாகும். இலங்கையின் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வையும், நாட்டின் வருங்கால முன்னேற்றத்தையும் மனதில் வைத்து சுகாதாரப் பகுதியினர் இந்த அத்தியாவசிய வேலையை உடனடியாகச் செய்ய முன்வந்துள்ளனர். இளம்பிள்ளை வாதத்திலிருந்து நாட்டின் குழந்தைகளைப் பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் செய்திருக்கின்றனர். பணத்தையே, நேரத்தையோ, கடுமையான உழைப்பையோ அவர்கள் பொருட்படுத்தவில்லை. குழந்தைகளைப் போலியோ பூதத்தின் வாயிலிருந்து தப்பவைக்கும் சேவை மனப்பான்மைதான் அவர்களை உந்தி இயங்க வைக்கின்றது. இளம்பிள்ளைவாத நோயைத் தடுப்பது இப்போது ஒரு தேசிய இயக்கமாகவே மாறி விட்டது.

இந்த தேசிய இயக்கம் வருகிற திங்கட்கிழமை மே 20-ந் திகதி ஆரம்பமாகின்றது. அன்று தொடங்கி ஒரு வாரத்திற்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து இலங்கை முழுவதும் கொடுக்கப்படும். எங்கள் பிள்ளை 3 மாதத்திற்கு மேற்பட்டவராயும் 8 வயதிற்கு உட்பட்டவராயும் இருந்தால் அவர் கண்டிப்பாக மருந்துத் துளிகளை எடுக்க வேண்டும். ஆம் சென்ற தடவை அவர் இத் தடுப்பு மருந்தை ஒரு தரமல்ல, இரண்டு தரமல்ல, மூன்று தரமே எடுத்திருக்கலாம். ஆனால் அவர் இந்த முறையும் ஒரு தரம் எடுப்பது அத்தியாவசியமாகும்.

இந்தத் தடுப்புத் துளிகள் அபாயமற்றவை. அதனால் வித்தியாசமான குணங்களோ, பாதகமான வியாதிகளோ, அபாயமான சிக்கல்களோ ஏற்படமாட்டா. பிரபல வைத்திய நிபுணர் ஆராய்சியாளர் இதற்கு உத்தரவாதம் அளிக்கிறார். அத்துடன் நமது நாட்டு குழந்தை வைத்திய நிபுணர்கள் மருந்தைப்பற்றி நன்கு அறிந்து, பரிசீலனை செய்த பின்பே உங்களுக்குத் தருகிறார்கள். அவர்கள் நமது நாட்டின் குழந்தைகளை, அவர்கள் நல்வாழ்வை, நமது நாட்டை இதயபூர்வமாக நேசிப்பார்கள். அறிவாற்றல் மிகுந்தவர்கள். இளம்பிள்ளை வாதம் உங்கள் பிள்ளைக்கு வராமல் தடுப்பது அவர்கள் தமது கடமை என நம்புகிறார்கள். உலகின் மற்ற நாடுகளில் 80,000,000 குழந்தைகள் இத் தடுப்பு மருந்தை எடுத்து இளம்பிள்ளை வாத நோயிலிருந்து தப்பியிருக்கிறார்கள்.

தடுப்பு மருந்தைத்தரத் தொண்டர்கள் விசேஷ பயிற்சி பெற்றிருக்கிறார்கள், அவர்களுடன் ஒத்துழைத்து துளிகளை உங்கள் குழந்தைகளுக்குக் கொடுப்பது உங்கள் கடமையாகும். குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கு அன்பு மட்டும் போதாது. அறிவும் வேண்டும். அறிவில்லாதவரின் அன்பு காலம்தப்பிய மழையைப்போல பயிரையே அழித்துவிடும்!

இளம்பிள்ளை வாதத் தடுப்பு இயக்கத்தின் பின்னணியில் இருப்பவை அன்பு, அறிவு, ஆராய்ச்சி, உழைப்பு.

அன்பு மனம் படைத்தவரின் நல்ல அறிவும், ஆராய்ச்சி மூளை படைத்தவரின் கடுமையான உழைப்பும் தான் இந்த மகத்தான தடுப்பு மருந்துக்குக் காரணங்கள். அந்த மருந்து உங்கள் பிள்ளைக்கும் உதவி அவரை இக் கொடிய நோயிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

தொண்டர்களுடன் தொண்டராகச் சேர்ந்து உங்கள் குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்துத் துளிகளை வாங்கிக் கொடுங்கள்.

"மே 20 திங்கட்கிழமை ஆரம்பமாகும் அகில இலங்கை இளம் பிள்ளை வாதத் தடுப்பு இயக்கத்திற்கு எனது ஆசியையும் ஆதரவையும் தெரிவிப்பதை எனது முதற் கடமையாகக் கருதுகிறேன்" என்று யாழ் நகர முதல்வர் ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

ஆம், அது நகர முதல்வரின் முதற்கடமைதான். அதே நேரத்தில் அது குடும்பத் தலைவனாகிய உங்களின் முதற் கடமையுங்கூட. குடும்பத் தலைவியாகிய தாய்மாரின் முதற் கடமையும் அதுதான்.

ஞாபகமிருக்கிறதா? மே மாதம் 20-ம் திகதி இளம் பிள்ளை வாதத் தடுப்பு இயக்கத்தின் ஆரம்ப நாள்.

# ராதாகிருஷ்ணனுக்கு ஈரானில் பெரும் வரவேற்பு

டெஹ்ரான், மே 17

ஈரானில் ஆறுநாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் பொருட்டு நேற்று இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இங்குவந்து சேர்ந்தபொழுது, அவருக்கு மகத்தானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஈரான் விமான நிலயத்தில் பீரங்கிகள் முழங்க, ஈரான்-பாரத தேசிய கீதங்கள் ஒலிக்க ஈரான் மன்னர், டாக்டர் ராதாகிருஷ்ணனை வரவேற்றார். டெ[illegible] நகரமேயர், ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு [illegible]கத்தினால் செய்யப்பட்ட திற[illegible]கோல் ஒன்றை வழங்கினார்.

டாக்டர் ராதா கிருஷ்ணனை நகரமேயர் வரவேற்றுப் பேசுகையில், பாரத-ஈரான் தொடர்புகள் வரலாற்று அடிப்படையானது என்றும், ராஷ்டிரபதியின் விஜயத்தினால் இந்த உறவுகள் மேலும் பலப்படும் என்றும் கூறினர்.

டாக்டர் ராதா கிருஷ்ணன் நன்றி தெரிவித்துப் பேசுகையில், அற்புதக்கவர்ச்சியுடைய நாட்டைப் பார்க்க மகிழ்ச்சியடைகிறதாகவும், பாரதத்திற்கும் ஈரானுக்கும் புதிய தொடர்புகள் ஏற்படும் என்றும் கூறினர்.

ராஷ்டிரபதி ஈரானை வந்தடைந்த சமயம், ஆப்கானிஸ்தான் மன்னருக்கு "நன்றிக் குறிப்பொன்றை" அனுப்பியிருந்தார். ராஷ்டிரபதி வந்த விமானத்தில் அனுப்பப்பட்ட அந்த "நன்றிக் குறிப்பில்", ஆப்கானிஸ்தான் மக்கள் காட்டிய அன்பைத் தம்மால் மறக்க முடியாதென்றும் பார்த்தது தன்னைக் கவர்ந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணனுக்கு நேற்றுமாலை

(5-ம பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

குன்னூரிலிருந்து ஓர் அன்பர் நீண்ட கடிதம் எழுதியுள்ளார்.

'நீலகிரியிலே இயற்கையின் எழில் பூரணப் பொலிவுடன் விளங்குகின்றது. மிதமான உஷ்ணத்துடன் இனிய குளிர் காற்று வீசுகிறது. பூஞ்செடிகள் வண்ணப் பூக்களைப் பூத்துக்குலுங்கி நிற்கின்றன. பிளம்ஸ், பீச்சஸ், ஸ்ட்ராபெரி போன்ற பலவகைப் பழவகைகள் எங்கெங்கும் குவிந்துள்ளன. இயற்கையன்னை தன் செல்வத்தையெல்லாம் வாரி வழங்குகின்றாள். ஆனால்'.. ...... என்று அன்பர் குறிப்பிட்டிருப்பதைப் படித்ததும் பாரதியார் பாடியது நினைப்புவருகிறது. "கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரு நாடு- நித்த நித்தம் கணக்கின்றித்தரு நாடு......" என்று அவர் பெருமையுடன் பாடினார். ஆனாலும் இங்குள்ளவர்களில் சிலர், பாரத நாட்டைப் பற்றி என்ன நினைக்கின்றனர்? கள்ளத்தோணிகளை அனுப்பி வைக்கும் ஒரு துரதிருஷ்ட நாடென்றுதானே! இந்த அவப்பெயர் எப்போது நீங்குமோ!

* * *

அதே அன்பர் தன் சொந்த அனுபவத்தைப்பற்றி எழுதுவதாவது:-

'நேற்றுக் காலை வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்ப 9 மணியாகிவிட்டது. பரீட்சை ஊட்டியில் 10 மணிக்கு. பஸ் பயணம் ஒரு மணி நேரமாகும். 8-30 முதல் 9-30 வரை குன்னூரிலே ஊட்டி பஸ் கிடைப்பது மிகக் கடினம். அதுவும் இப்போது ஸீஸன் வேறு. 9 மணிக்கு பஸ் ஸ்டாக்காகச் சாலையில் வந்து நின்றேன். நெடுந்தூரத்துக்கு பஸ்ஸின் சுவடே தெரியவில்லை. (இந்தியாவிலும்இதேகதைஎன்பதை அறிய நமக்கு ஒருவித ஆறுதலாக இருக்கிறதல்லவா?)

"மணி9-10ஆகிவிட்டது பதட்டம் மிகுந்தது. ஒன்றும் புரியவில்லை. உடன் இறைவனின் ஞாபகம் வந்தது. மனதில் அமைதி நிறைந்தது. இறைவனைத் தொழுதேன். மூடிய கண்களைத் திறந்தேன். கண்ணெதிரில்,ஆச்சரியம்! 100 கஜ தூரத்திலே பஸ் வந்துகொண்டிருந்தது. அதுவும் அந்நேரத்துக்கு வர இயலாத கோயமுத்தூர் பஸ். கும்பலுமில்லை. பஸ்ஸை நிறுத்தி ஏறிக்கொண்டேன். என் மனம் இன்னதென்று புரியாத நிலை அடைந்தது. பரம்பொருளின் கருணையைக் கண்டு அயர்ந்துபோய், பரீட்சைத் தாளைக் கையிலெடுக்கும்வரை அதே நிலையில் இருந்தது. தூய மனத்தினின்றும் எழும் உருக்கமான வேண்டுதல் இறைவனுக்குக் கேட்காமற்போகாது என்பதை நேற்று காலையிலேயே கண்டேன்......" என்று குறிப்பிட்டு, எம். ஆர். ஏ. இயக்க ஸ்தாபகரான "பிராங்க் புக்மெனின் ரகசியம்" என்ற நூலைத் தாம் படித்ததாயும், அது தமக்கு இதுவரை நினைத்திராத புது வழியைக் காட்டியிருப்பதாயும், காந்தி அடிகளின் சக்தியின் ரகசியத்தையும் தாம் உணர முடிந்ததென்றும் மிக உற்சாகத்துடன் கூறுகின்றார்.

அந்த பஸ் தற்செயலாக வந்ததென்றும், ஒவ்வொரு முறையும் பிரார்த்தனை செய்தால் பஸ் வருமா என்றும் சில பகுத்தறிவாளர்கள் விதண்டாவாதமாகக் கேட்கலாம். ஆனால் கருணைக்கடலான கடவுளையே நம்பியிருப்பவர்கள், பஸ் வராவிட்டாலும் கூட அதுவும் ஏதோ நலலதற்கென்றே மன ஆறுதலும் திருப்தியும் அடையக்கூடும். ஒருவருக்கு மனத்திருப்திமட்டும் இருந்துவிடுமாயின், அவருக்கு வேறு என்ன வேண்டும்?

* * *

பிராங்க் புக்மென் எனும் பெரியார் ஸ்தாபித்த எம். ஆர். ஏ. எனும் தார்மீக புனருத்தா

(5-ம பக்கம் பார்க்க)

தென்வியட்னும்

# பௌத்தர்கள் நிலை குறித்து அரசியல் கட்சிகள் அக்கறை

## பார்லிமெண்டை கூட்டுமாறு கே. எம். பி. கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

தென்வியட்னுவில் கத்தோலிக்க அரசாங்கத்தின் கீழ் பௌத்த மதத்தவர்கள் இம்சைப்படுத்தப்படுவது குறித்து தாம் எவ்வித நடவடிக்கை எடுக்கவேண்டுமென இலங்கையிலுள்ள சில அரசியல் கட்சிகள் ஆலோசனை செய்து வருகின்றன.

வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்ன ஜனப்பிரதிநிதிகள் சபை சபாநாயகருக்கு அனுப்பியுள்ள தந்தியொன்றில் சகோதர பௌத்தர்களின் நலனைப் பாதுகாப்பதற்கு எவ்வித நடவடிக்கை எடுக்கலாமென்பது பற்றி தீர்மானிப்பதற்காக ஜனப்பிரதிநிதிகள் சபையைக் கூட்டுமாறு கோரியுள்ளார்.

திரு. கே. எம். பி. சபாநாயகருக்கு அனுப்பியுள்ள தந்தியில் தெரிவித்துள்ளதாவது:

தென்வியட்னுமில் பெரும்பான்மையான மக்கள் பௌத்த மதத்தவர்களாக இருந்தும் அமெரிக்காவினுல் ஆதரிக்கப்படும் கிறிஸ்தவ இயக்கம் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றியுள்ளது. இந்த இயக்கம் பௌத்தமத மக்களை நசுக்கப் பார்க்கிறது. அழித்தொழிக்கத் திட்டமிடுகிறது.

பௌத்த நாடுகளில் முன்னணியில் நிற்கும் இலங்கை இது குறித்து மௌனமாக இருந்துவிட முடியாது. தென்வியட்னுமில் இன்று நடைபெறுவது நாளை இலங்கையில் நடைபெறலாம். பௌத்தமத நாட்டில கத்தோலிக்க அரசாங்கமோ கத்தோலிக்க மந்திரியோ இருப்பது பௌத்தமதத்தை அழித்தொழிப்பதற்கே.

தென்வியட்னும பிரதமர் தென்வியட்னுமிலுள்ள அதிமேற்றிராணியாரின் சகோதரர்.

இந்த விவகாரம் குறித்து ஜனப்பிரதிநிதிகள் சபையில் விவாதிப்பதற்கு சபையை விரைவில் கூட்டவேண்டும். இல்லாவிடில் இந்த நாட்டிலுள்ள பௌத்த மதத்தவர்களின் பெயருக்கு இழுக்குத் தேடுவதாக இருக்கும்.

தென்வியட்னுமில் இடம்பெற்று வரும் விவகாரங்கள் பற்றி தாமும் ஆராய்ந்து வருவதாக டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்துள்ளார்.

வியட்னுமுக்கு தர்ம தூது கோஷ்டியில் சென்ற வண. நாரத மகாதேரோ எங்கிருக்கிறுர் என்பது பற்றி அறிவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முடியுமா என கைத்தொழில் கலாசார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா பிரதமரைக் கேட்டுள்ளார்.

பர்மாவும் தாய்லாந்தும் இலங்கையுடன் நட்புறவு கொண்டுள்ள பௌத்த நாடுகளானபடியால் இது விஷயத்தில் அவை உதவும் என மந்திரி நம்பிக்கை கொண்டுள்ளார்.

# சுவீப் அதிர்ஷ்டசாலிகள்

கொழும்பு, வெள்ளி

வவனியாவில் நேற்று இழுக்கப்பட்ட ஆஸ்பத்திரி சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
16 V 0511 ரு. 51,640

இரண்டாவது பரிசு
10 L 0714 ரு. 20,656

மூன்ருவது பரிசு
07 J 0244 ரு 10,328

தலா ரு. 413-12 பெறும் 50 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 07 J 0170 | 10 J 0498 |
| 13 N 0343 | 09 G 0910 |
| 10 R 0352 | 08 R 0614 |
| 21 Y 0613 | 16 M 0249 |
| 18 J 0856 | 03 J 0358 |
| 10 M 0414 | 08 Y 0593 |
| 05 E 0394 | 20 E 0797 |
| 13 C 0940 | 02 K 0874 |
| 07 E 0503 | 08 E 0126 |
| 01 U 0892 | 06 V 0700 |
| 04 Y 0550 | 11 A 0591 |
| 08 U 0507 | 16 H 0962 |
| 11 P 0595 | 03 N 0764 |
| 15 G 0961 | 21 R 0043 |
| 18 Y 0945 | 14 S 0350 |
| 17 L 0303 | 15 L 0388 |
| 02 K 0363 | 03 N 0052 |
| 11 L 0225 | 01 W 0929 |
| 08 W 0604 | 09 M 0179 |
| 11 Q 0191 | 07 V 0633 |
| 01 N 0862 | 01 Z 0361 |
| 06 F 0741 | 18 C 0123 |
| 2 B 0535 | 20 L 0506 |
| 14 G 0025 | 04 Z 0212 |
| 14 U 0094 | |

# "பயனுள்ளவற்றை எழுதுங்கள்"

## பத்திரிகையாளருக்கு இந்தோனேஷிய ஜனதிபதி அறிவிப்பு

ஜாகர்த்தா, மே 17

"பயன்தரக்கூடிய விஷயங்களை எழுதுங்கள். இல்லாவிட்டால் அவை பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுவிடும்" என இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்ணே பத்திரிகைக்காரர்களுக்கு அறிவித்துள்ளார்.

'பத்திரிகைகள் பாதுகப்பு' சம்பந்தமாக ஜனதிபதி செய்துள்ள தீர்மானம் பற்றித் தெரிவிக்கையிலேயே டாக்டர் சுகர்ணே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தோனேஷிய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் வெளியிடும் விஷயங்கள் இந்தோனேஷிய சமூகப் புரட்சிக்கு உருக் கொடுப்பதாக இருக்கவேண்டும் என ஜனதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

'பத்திரிகைகள் பாதுகாப்பு விதிசம்பந்தமாகஜனதிபதியின் முடிவு' என்ற தலைப்பில் வெளியான உத்தரவில் தெரிவிக்கப்பட்டதாவது:

'பத்திரிகைகள் பாதுகாப்பு' பொறுப்பு தகவல் மந்திரி டாக்டர் ரஸ்லான் அப்துல்கனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவருக்கு உதவியாக ராணுவசேவையினர் இருப்பார்கள்.

பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு பத்திரிகையும் சஞ்சிகையும் பிரசுரிக்கும் பர்மிட் பெற்றிருக்கவேண்டும். அரசாங்கத்தின் பஞ்சசீலக் கொள்கையை அநுசரித்து இந்தக் கொள்கையைப் பரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கத்தின் அரசியல் கொள்கையையும் வெளியிடவேண்டும்.

இவற்றை அநுசரித்து செயல்படாத எந்த ஸ்தாபனத்தின் பர்மிட்டும் வாபஸ் பெறப்படும். இந்த விதிகளை மீறுபவர்களுக்கு சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படும்.

## ராதாகிருஷ்ணனுக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈரான் மன்னர் விருந்தளித்தார். இரவு விருந்தைத் தொடர்ந்து வானவேடிக்கைகள் இடம் பெற்றன. நேற்றுப் பிற்பகல் ராதா கிருஷ்ணன் நகர வீதிகளில் காரில் செல்லும் பொழுது வீதியின் இரு மருங்கிலும் சுமார் ஆறு மைல் வரை மககள் குழுமிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஈரானில் டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு, வேறு எந்த நாட்டுத் தலைவர்களுக்கும் இங்கு கொடுக்கப்படவில்லையென்று அவதானிகள் கூறுகின்றனர்.

## தேநீர்க்கடை . . .

(2-ம் பக்க தொடர்ச்சி)

வர். எனவே தமிழ் இளைஞர்களுக்கு இப்பணிகளைத் திருவள்ளுவர் திருநாளன்று நிறைவேற்றத் திரண்டெழுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறேம். இளைஞர்கள் நினைத்தால் முடியாததொன்றுண்டோ?

சிறுபான்மைத் தமிழருக்கு நாம் சமத்துவம் நல்கினுல், நம் மினம் இழந்துவிட்ட மொழியுரிமை, குடியுரிமை, நிலஉரிமை ஆட்சியுரிமைமைமுதலியயாவும் விரைவிற்கிடைக்கும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். தம்மைப்போற் பிறரைப்போற்றுபவர்கள் தரணியிலே தாழ்வடைய மாட்டார்கள். இந்த இமய மலைபோன்ற உண்மையை மறந்தமையாலேயே இன்று நம்மினம் தாழ்வுற்றடிமைப்பட்டுள்ளது. எங்கள் விடுதலை-எங்கள் நல்வாழ்வு எங்கள் கையிலேஉள்ளது "பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு பிற்பகல் தாமே வரும்" எனும் தமிழ் மறையை உள்ளத்தி விருத்தி யாவர்க்கும் நன்மை செய்ய முயல்வோம்.

கா. பொ. இரத்தினம்
தலைவர்
தமிழ் மறைக்கழகம்

கொழும்பு, 7.

# "ஒத்துழைத்த எமக்குகிடைத்த பரிசு நம்பிக்கைத் துரோகமே"

## இலங்கை துறைமுக தொழிலாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேச்சு

திருக்கோணமலை, புதன்

துறைமுகங்களில் வேலைசெய்யும் தமிழ்ப் பேசும் தொழிலாளர்களுக்கென 'இலங்கைத் துறைமுகத் தொழிலாளர்கள் சங்கம்' என்ற பெயரில் திருமலைத் துறைமுகத்தில் வேலை செய்யும் தமிழ்ப்பேசும் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு தொழிற் சங்கம் அங்குரார்ப்பணச் செய்யப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பண விழாவில் கலந்துகொண்டுரையாற்றிய அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரமுகர் திரு. செ. கோடீஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:-

'இனவேற்றுமையற்றதொழிலாளர் ஒற்றுமை' என்ற இடதுசாரித் தொழிற் சங்கங்களின் கோஷத்திற்கு இனியும் தமிழ்ப் பேசும் தொழிலாளர்கள் செவிசாய்க்க முடியாது. 40 ஆண்டுகளாக "இனவேற்றுமையற்ற தொழிலாளர் ஒற்றுமை" என்ற ரீதியில் சிங்களம் பேசும் தொழிற்சங்கவாதிகளுடன் ஒன்றுபட்டு பல வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட எமக்கு அவர்களால் கிடைத்த பலன் நம்பிக்கைத் துரோகமே. தனிச் சிங்களச் சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட எமக்கு, எமது அடிப்படை உரிமைகளுக்காக வாதாட, போராட முடியாதென மறுத்துள்ளனர் நமது முன்னைய தோழர்கள். இந்த நிலையில் தமிழ்ப் பேசும் தொழிலாளர்கள் தங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்து வலிமையைப் பேணி, தமிழ்ப் பேசும் தொழிலாளர்களுக்கென பலதுறைகளிலும் தொழிற் சங்கங்கள் நிறுவவேண்டும்."

சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாதுகாவலர்: திரு. ந. இ. இராஜவரோதயம் எம். பி., தலைவர்: திரு. கே. எஸ். செல்லத்துரை, உப-தலைவர்கள் திருவாளர்கள் க. சதாசிவம், அ. அமிர்தலிங்கம எம். பி., பொதுச் செயலாளர்: திரு. செ. பத்மநாதன், உப-செயலாளர்கள்: திருவாளர்கள் குலசிங்கம், சூரியகாந்தி, பொருளாளர்: திரு. சு. இராஜரத்தினம், உப-பொருளாளர்: திரு. இ. சி. சிங்கன்.

செயலவை உறுப்பினர்கள்: ஜனுப் ச. முகமது இப்புருகிம். திருவாளர்கள் இரத்தினம், கனகரத்தினம், க. இரசதுரை

இச்சங்கத்தின் கிளைகள் மற்றத் துறைமுகங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமெனத் தெரிகின்றது.

## உதவி மந்திரி திருமலை விஜயம்

திருமலை, வெள்ளி

உதவி சுகாதார மந்திரி திரு. ஒபயசேகரா திருமலைக்கு விஜயம் செய்து ஆஸ்பத்திரிகளின் நிலைமையைப் பார்வையிட்டார். திருமலை எம். பி. திரு. இராஜவரோதயம் உதவி மந்திரியுடன் பெரியாஸ்பத்திரிக்கு சென்று தேவைகளையும் குறைகளையும் எடுத்துக் கூறினுர். அவற்றைக் கவனிப்பதாக உதவிமந்திரி உறுதியளித்தார்.

## இலங்கை வங்கி புதிய டைரக்டர்

கொழும்பு, வெள்ளி

இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னுள் தலைவரான திரு. ஆர். டி. டி' சில்வாவை இலங்கை வங்கியின் டைரக்டர்கள் சபையில் ஒரு அங்கத்தவராக நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக விருந்த திரு. கே. ஆழ்வாப்பிள்ளை ஒய்வு பெற்றதன் விளைவாக ஏற்பட்டுள்ள காலிஸ்தானம் விரைவில் நிரப்பபடுமென நம்பப்படுகிறது.

# மனைவி, குழந்தை மரணம் பற்றிய விசாரணை

## கணவன் விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி

சுன்னுகத்தைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் அன்னமலர் வயது (25) அவரது கடைசி மகன் பிரேமச்சந்திரன் (வயது 2½) ஆகிய இருவரும் சென்ற ஜனவரி மாதம் 24-ம் திகதி மரணமானதையொட்டி சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டு ரு.1,500 பிணையில் அனுமதிக்கப்பட்ட அன்னமலரின் கணவனை சிவகுரு தவரத்தினம் நேற்று விடுதலைசெய்யப்பட்டார்.

மேற்படி விசாரணை மல்லாகம் நீதிபதி திரு. வெ. வி. டி' தாமோதரம் முன்னிலையில் நடைபெற்றபோது சந்தேக நபரின் மகனை வைகுந்தவாசன் (வயது 10) சாட்சியமளித்தார். சந்தேக நபரின் தந்தையான வேலுப்பிள்ளை சிவகுரு சாட்சியமளிக்கையில்; சந்தேக நபர் நச்சுத் திராவகத்தை மனைவிக்குக் கொடுத்ததைத் தான் காணவில்லையெனத் தெரிவித்தார்.

நீதிபதி சந்தேக நபரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் சந்தேக நபர் மீது கடுமையான சந்தேகமேற்படக்கூடிய சூழ்நிலை இருந்தாலும் அதை நிரூபிக்கக்கூடிய விதத்தில் ஆதாரம் தெரிவிக்கப்படவில்லையெனத் தெரிவித்தார்.

சுன்னுகம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. சி. சின்னையா வழக்கை நடத்தினுர்.

சந்தேக நபர் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

## மன்னரில் இன்று...

(1-ம் பக்க தொடர்ச்சி)

செயற் குழுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தின் இதர தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் நாளை சனிக்கிழமை காலை வந்துசேருவார்களென எதிர்பாக்கப்படுகிறது.

செயற் குழுக்கூட்டத்தில் இன்றைய அரசியல் நிலை பற்றி ஆராயப்படுமென்றும் அரசியல் சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்தே நேரடி நடவடிக்கை பற்றிப் பரிசீலனை செய்யப்படுமென்றும் அறியப்படுகிறது.

அநேகமாக நேரடி நடவடிக்கை பற்றி இக்கூட்டத்தில் முடிவு எதுவும் செய்யப்படமாட்டாதென்றும் தெரியவருகிறது.

செயல் கமிட்டிக் கூட்டத்தைத் தொடர்ந்து 'எல்லாம் தமிழியக்க வாரம்' ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதன்பின் சமூக ஒற்றுமை வாரம் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரண வாரம் இன்று முதல் ஒரு வாரம்வரை கொழும்பில் நடைபெறுகிறது. பிரதம நீதி அரசர், ஜெர்மன், பிரேஸில், கனடா தூதுவர்கள் தலைமை வகிக்கிறுர்கள். போட்டோ காட்சி, புத்தகக் காட்சி, சினிமா காட்சிகள் இவை லயனல் வெண்ட் கலை மண்டபத்தில் நடைபெறுகின்றன.

* * *

வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டிற் பூட்டி
அஞ்சலென் ருண்டுகொண்டாய் அதுவுநின் பெருமையன்றே
நெஞ்சகங் கனியமாட்டேன் நின்னையுள்வைக்கமாட்டேன்
நஞ்சிடம் கொண்ட கண்டா என்னென நன்மைதானே

—திருநாவுக்கரசர்.

## தமிழ் தெரியாத முஸ்லிம் மாணவி

கொழும்பு, வெள்ளி

சிங்கள மொழிமூலம் பயின்று 5-ம் வகுப்பு பரீட்சையில் விசேஷ சித்தியெய்திய ஒரு முஸ்லிம் மாணவி, தமிழோ, ஆங்கிலமோ தெரியாத காரணத்தால், தொடர்ந்து படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அழுத்கம, சங்கமித்த வித்தியாலயத்தில் படித்து 5-ம் வகுப்பு பரீட்சையில் தேறி உதவிச் சம்பளம் மூலம் வேறு பாடசாலைக்கு தொடர்ந்து படிக்க இவர் சென்றுர். இவர் ஒரு முஸ்லிம் மாணவியாக இருப்பதால் தர்க்கவுடான், அரசினர் மத்திய முஸ்லிம் பெண்பாடசாலையின் தொடர்ந்து படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்.

அப்பாடசாலையில் தமிழ், ஆங்கிலம், மூலம் மட்டுமே கல்வி கற்கப்பட்டு வருவதால், அம்மொழிகள் தெரியாத இந்த முஸ்லிம் மாணவி திண்டாடுகிறுர்.

# எதிர்க்கட்சிகள் தேர்தலுக்கு ஏற்பாடு

## 'பட்ஜட்'டுடன் அரசாங்கம் வீழுமென நம்பிக்கை

கொழும்பு, வியாழன்

இந்த வருட இறுதியில் அடுத்த பொதுத் தேர்தல் இடம் பெறலாமென எதிர்க் கட்சிகள் நம்பிக்கை கொண்டுள்ளதால் அந்தத் தேர்தலுக்கான அலுவல்களில் இப்பொழுதே அவர்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது.

வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்ற முடியாது என்ற அபிப்பிராயமும் எதிர்க் கட்சிகளிடையே நிலவுவதாக அறியப்படுகிறது.

சமீபத்தில் நாரம்பிட்டியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பேசுகையில் அரசாங்க எம். பி க்கள் கூட வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தே வாக்களிப்பார்களெனத் தெரிவித்தார்.

இப்பொழுது ஜனப்பிரதிநிதிகள் சபையில் அரசாங்கத்துக்கு 8 பெரும்பான்மையான வாக்குகளே இருக்கின்றது.

அரசாங்க சார்பில் இப்பொழுது 82 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் 72. நியமன அங்கத்தவர்கள் 6. சுயேச்சை அங்கத்தவர்கள் (அரசாங்கத்தின் சார்பில் வாக்களிப்பவர்கள்) 4.

எதிர்க் கட்சியில் 74 அங்கத்தவர்கள் இருக்கின்றனர். யு. என். பி. அங்கத்தவர்கள் 29. தமிழரசுக்கட்சி அங்கத்தவர்கள் 16. சமசமாஜக் கட்சி அங்கத்தவர்கள் 12. கம்யூனிஸ்ட் அங்கத்தவர்கள் 4. எம். ஈ. பி. 3. ஜாதிக விமுக்தி பெரமுனே 2. தமிழ் காங்கிரஸ் அங்கத்தவர் 1. லங்கா பிரஜாதந்திரவாதிக் கட்சி அங்கத்தவர் 1. மற்றவர்கள் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா, திரு அசோகா கருணரத்ன, திரு. தனபால வீரசேகரா, திரு. எஸ். தசநாயக்கா, திரு. டி. சிவசிதம்பரம், டாக்டர் டபிள்யு. டி. டி' சில்வா,

# "ஜம்மு காஷ்மீர் ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்செயல் "சொல்லொன்று செயலொன்று" என்ற கருத்தையே வெளிக்காட்டுகிறது. காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க பாரதம் விரும்புகிறதென்று வெளிப்படையாகவும் அறிக்கை மூலமாகவும் தெரிவித்து வந்திருக்கிறது. ஆனால்பாகிஸ்தானின் இச்செயல் எம்மைத் திக்குமுக்காடச் செய்கிறது.

## "வியப்பாகவிருந்தது"

காஷ்மீர் பிரனைப் பேச்சுக்களுக்கு இறுதி என்பது கிடையாது. இதுதான் இறுதியான பேச்சு; இனிமேல் பேச்சுக்கள் எதுவும் நடைபெறமாட்டாது என்று பாரதம் எப்பொழுதும் எண்ணியதில்லை. ஆனால் பாகிஸ்தான் கோஷ்டியின் தலைவரான புட்டோ, ஆருவது சுற்றுப் பேச்சுக்களே இறுதியானது. இனிமேல் பேச்சுக்கள் நடைபெறமாட்டாதுஎன்று தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் தரப்பினர் தங்களுக்கு ஜம்மு, காஷ்மீர் மற்றும் லடாக் பள்ளத்தாக்குப் பகுதிகள் வேண்டுமென்று கோருகின்றனர். அவர்களின் பேச்சுக்களிலிருந்து, ஜம்மு, காஷ்மீர் முழுவதும் அவர்களுக்கு வேண்டும் என்பது நன்கு புலனாகிறது. அப்படியானால் 85,000 சதுர மைல் பாகிஸ்தானுக்கும், பாரதத்துக்கும் 3,000 சதுர மைல்மட்டுமே கிடைக்க வழிபிறக்கிறது. இந்தத் தகவலை பாகிஸ்தான் வெளியிட்டதும் நாம் திகைப்படைந்தோம். பாகிஸ்தானின் இந்தக் கோரிக்கை பெரும் வியப்பாகவிருந்தது! தனக்குச் சொந்தமான பகுதியை பாகிஸ்தானுக்குப் பாரதம் விட்டுக்கொடுக்க முடியாது. ஆனாலும், பாகித்தானுக்கு 32 000 முதல் 34,000 சதுர மைல்வரை கிடைக்க பாரதம் வழி செய்திருக்கிறது. இப்படியான கட்டத்தில், பாகிஸ்தானின் விபரீதமான கோரிக்கை எமக்கு வியப்பையே அளித்திருக்கிறது.

## அரசியல் தீர்வு

இரு நாடுகளுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவதற்கு பாகிஸ்தான் உடன்படவில்லை. இதை மீண்டும் மீண்டும் நாம் வலியுறுத்தியும் பாக். அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அரசியல் தீர்வு மூலம், கௌரவமான, நியாயமான தீர்வு காணமுடியும் என்பதை பாரதம் வலியுறுத்தியது. படைகளை விலக்க அரசியல் தீர்வு உதவியளிக்கும். மத்தியஸ்த யோசனை பற்றி, பேச்சுக்களில் எந்தவிதமான யோசனைகளும் இடம் பெறவில்லை.

## புட்டோ கருத்து

பாரத-பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்னையில் சமாதானத் தீர்வு ஏற்படுவதையே பாகிஸ்தான் விரும்புகிறது. காஷ்மீர் விஷயத்தில் இறுதியாக ஒரு தீர்வு ஏற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்றுவரும் சுற்றுப் பேச்சுக்கள் இம்முறையுடன் முடிவடைந்துவிட்டன. ஆருவது சுற்றுப் பேச்சே இறுதியானது என்பதை நாம் முன்னரே கூறியிருந்தோம். முன்னேற்றம் எதுவும் காணப்படாத பேச்சுவார்த்தைகளை மேலும் நீடிப்பதில் பிரயோசனமில்லை என்று புட்டோ தெரிவித்துள்ளார்.

## "கருத்து வேற்றுமை நிறைய உண்டு"

பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கருத்துவேற்றுமை நிறைய உண்டு. இப்படியான சமயத்தில் பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்னைக்குத் தீர்வு காண்பது கஷ்டமே. மேற்கு நாடுகள் தெரிவித்திருந்த மத்தியஸ்த யோசனைபற்றி பாகிஸ்தான்; பிரிட்டனிடமும் அமெரிக்காவிடமும் விளக்கம் கேட்டிருக்கிறது. என்றும் அவர் கூறினர்.

## கராச்சி புறப்பாடு

புதுடில்லியில் நடைபெற்ற இரண்டு நாள் பேச்சுக்களை முடித்துக்கொண்டு, பாகிஸ்தான் கோஷ்டியினர் நேற்று மாலை புதுடில்லியிலிருந்து விமான மார்க்கமாகக் கராச்சிக்குப் புறப்பட்டனர்.

# உணவருந்திய 500 தொழிலாளர் சுகவீனம்!

கும்புறுப்பிட்டியா, வியாழன்

டெனியாவைச் சேர்ந்த ஒரு தோட்டச் சொந்தக்காரரின் வீட்டில் மத்தியான போசனம் செய்தபின் ஏறக்குறைய 500 தொழிலாளர் சுகவீனமுற்றனர். சோறும், கறியுமே உணவாக உட்கொண்ட அவர்கள் மாத்தறை, தெனியாயா, மொறவாக்கை, அக்குறஸ்ஸ ஆகிய இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதைவிட, நச்சுத்தன்மையடைந்த உணவையுட் கொண்டதனால் சுகவீனமுற்ற சம்பவம் மாத்தறையிலுள்ள கந்தேகொட என்னுமிடத்தில் ஒரு கலியாண வீட்டிலும் நிகழ்ந்தது. இச்சம்பவத்தில் 50 பேர்வரையில் சுகவீனமுற்றிருப்பதாகவும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் ஐம்பது பேரில் ஒருவரின் நிலை மோசமானதாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக் கழகத்தில் இடவசதி குறைவு

கொழும்பு, வியாழன்

பல்கலைக் கழகத்தில் கலைப் பகுதியில் போதுமான அளவு மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளார்களென்றும் விரிவுரை மண்டபங்களில் இருக்கும் இடவசதியைப் பொறுத்துத்தான் மாணவர்கள் சேர்க்கப்படுவார்களென்றும் பல்கலைக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக் கழகப் புதுமுகப் பரீட்சையில் சித்தியடைந்த பல மாணவர்களுக்குப் பல்கலைக் கழகத்தில் இன்னும் அனுமதியளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டிருந்த புகாரைத் தொடர்ந்தே பல்கலைக் கழக அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்

# சுதந்திரக்கட்சி மகாநாட்டுக்கு தீர்மானங்கள் குவிகின்றன

கொழும்பு, வெள்ளி

அடுத்தமாதம் முதல் திகதியில் பதுளையில் நடைபெறவிருக்கும் சுதந்திரக் கட்சியின் மாகநாட்டில் விவாதிப்பதற்காக இலங்கை பூராவுமுள்ள சுதந்திரக் கட்சிக் கிளைகளும், சுதந்திரக் கட்சி வாலிப முன்னணிகளும் பல தீர்மானங்களை அனுப்பியுள்ளன.

அனுப்பப்பட்டுள்ள அநேகமான தீர்மானங்கள் வாழ்க்கைச்செலவு உயர்வு பற்றியும், லஞ்ச ஊழல் சம்பந்தமாகவும் கட்சியில் ஒழுக்கக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வற்புறுத்துவதாகவும் இருப்பதாக அறியப்படுகிறது. கட்சிக் காரியதரிசிக்கு அனுப்பப்பட்டுள்ள சில தீர்மானங்கள் வருமாறு:-

* வாழ்க்கைச்செலவு உயர்வைத் தடுக்கத்தக்க நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும். பொருள்களைப் பதுக்கிவைப்பது குற்றமாகக் கணிக்கப்பட்டு இவ்விதம் பதுக்கிவைப்பவர்களுக்குத்தகுந்த தண்டனை அளிக்கப்படவேண்டும்.

* பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் அல்லாதவர்களைக் கொண்ட கமிட்டி ஒன்று நியமனம்செய்யப்பட்டு முக்கிய விஷயங்களில் இந்தக் கமிட்டி மந்திரிக்கு ஆலோசனை தெரிவிக்கும்வகையில் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

* கட்சியைப்பற்றி பகிரங்கமாக எம். பி.க்களோ மந்திரிகளோ எதையும் கூருதவகையில் கட்சியின் ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஸ்திரப்படுத்தவேண்டும்

### ஊழல்கள் களையப்பட வேண்டும்

* பொது இடங்களில் குறிப்பாக அரசாங்க கார்ப்பரேஷன்களிலும், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களிலும் ஊழல்களைக் களைவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வித விஷயங்களில் ஈடுபட்டதாகக் காணப்படும் குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும்.

* இலங்கையரல்லாத எவரும் இங்கு காணியையோ சொத்தையோ வாங்கவோ, புதிய வர்த்தகத்தை ஆரம்பிக்கவோ, புதிய கைத்தொழிலை ஆரம்பிக்கவோ அனுமதிக்கக் கூடாது.

* பங்கீட்டரிசிப் புத்தக விநியோகத்தில் இடம்பெறும் மோசடி சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

* இலங்கையை குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யும் கட்சியின் கொள்கை தாமதமின்றி நிறைவேற்றப்படவேண்டும்.

* இலங்கையர்கள் ஒவ்வொருவரும் தமது புகைப்படத்துடன் கூடிய அடையாளச் சீட்டை வைத்திருக்கவேண்டுமென்ற விதி அடுத்த பொதுந் தேர்தலுக்கு முன் அமுலாக்கப்படவேண்டும்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

சுயதேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு திடமான சமுதாயத்தை வளர்க்க நாம் உங்களுக்கு உதவ முடியும்

விவ்சாயமோ





உற்பத்தி கைத்தொழிலோ



உள்நாட்டு உற்பத்தி வகைகளோ

எதுவானாலும்; அதற்கு ஆரம்ப மூலதனமும், உங்களது அன்றாட அலுவல்களுக்கு ஸதிரமான வங்கி வசதிகளும் அத்தியாவசியம். வெற்றிகரமான வளர்ச்சியை உறுதிப்படுத்த நீங்கள் எப்பொழுதுமே மக்கள் வங்கியை நம்பலாம்.

மக்கள் வங்கி

தலைமைக் காரியால[illegible]: யூனியன் [illegible], கொழும்பு-2

கொழும்பு காரியாலயங்கள்: யூனியன் பிளேஸ் காரியாலயம், 221, கொழும்பு-2. டியூக் வீதி, கொழும்பு-1. பார்க் வீதி, கொழும்பு-2, வெளிநாட்டு அலுவல் கிளைக் காரியாலயம், வை. எம். பி. ஏ. கட்டிடம் கொழும்பு-1.

பிரதான காரியாலயம்: தெஹிவளை.

வெளிப்பகுதி கிளைக் காரியாலயங்கள்: அம்பாறை, அனுராதபுரம், அவிசாவளை, பதுளை பலாங்கொடை, பிபிலே, சிலாபம் காலி கம்பஹா, கம்பொளை, ஹம்பந்தொட்டை, ஹங்குரன்கெட்ட, ஹிங்குரக்கொடை, யாழ்ப்பாணம் கண்டி, காங்கேசன்துறை, கல்முனை, கேகாலை, குளியாப்பிட்டி, குருணகலை, மாத்தளை, மினுவன்கொடை, முல்லைத்தீவு, பொலன்னறுவை, புத்தளம், வெலிமடை.

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 18-5-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஜி. ஜி. சண்முகானந்தம் — வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 ஏ. எஸ். சுந்தரராஜா — பேச்சு, 9-30 கே. கே. அந்தோனி — பாட்டு.

### ஞாயிறு 19-5-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைக்குரல், 6-10 குரல் வகை, 6-30 தாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-30 பிஸ்கா சிவகுமாரன் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'கொழு கொம்பு' — நாடகம், 9-45 நிலைய ஒலிப்பதிவுகள், 10-15 தேர்ந்தஇசை.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

### சனி 18-5-63

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரலிசை, 2-10 சுசீலா நாராயணன் — வயலின்.

மாலை 5-15 சுசீலா நாராயணன் — வயலின், 5-45 வாத்யஇசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'நதியின் தாகம்' — நாடகம், 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

### ஞாயிறு 19-5-63

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை; 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 அருணாசலக் கவியின் ராமநாடக கீர்த்தனைகள், 8-15 செம்பொன்னார் கோயில் ஆர். தக்ஷிணாமூர்த்திபிள்ளை — நாகஸ்வரம்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 'அன்னை' — ஒலிச்சித்திரம்.

மாலை 5-15 எச். எஸ். மத்வாச்சார் — கோட்டுவாத்தியம், 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கொட்டுமுரசே — சித்திரம், 7-45 ராமநாதபுரம் எம். என். நடராஜபிள்ளை — புல்லாங்குழல், 9-15 தேச பக்திப்பாடல்கள், 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

# சுப்பிரமணியம் வெற்றிக் கிண்ண கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

## இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது

கந்தரோடை, வியாழன்

டாக்டர் சுப்பிரமணியம் வெற்றிக்கிண்ணத்திற்காக கந்தரோடை சனசமூகநிலையம் நடத்தும் கைப்பந்தாட்டப் போட்டி உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இதுவரை நடந்த போட்டிகளில் சுன்னாகம் றெக்கெட், ஒலிம்பிக்ஸ தெல்லிப்பழை, உடுவில் ஸ்ரார்ஸ் முன்னணியில் நிற்கின்றன. றெக்கெட் கோஷ்டிக்கும்,உடுவில்ஸ்ரார்ஸ்கோஷ்டிக்கும் நடந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. எனினும் உடுவில் ஸ்ரார்ஸ 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. வேறு ஒரு ஆட்டத்தில் ஒலிம்பிக் கோஷ்டிக்கும றெக்கெட்டுக்கும் நடைபெற்ற இப்போட்டியில் சிறந்த ஆட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இதுவரை முன்னணியில் நின்ற ஒலிம்பிக்ஸ றெக்கெட் கோஷ்டியின் கடும் தாக்குதலுக்கு ஆளாகியது மட்டுமல்லாமல் ஆட்டத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வருடத்தில் றெக்கெட் 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. [illegible]

திரு. அ. முருகையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## கல்வி இலாகா வெற்றி

வவனியா, வெள்ளி

வவனியா நீர்ப்பாசன இலாகா சழகத்தினல் நடத்தப்பெறும் அம்பலவாணர் வெற்றிக்கேடய கைப்பந்தாட்டப் போட்டியில் கல்வி இலாகாவுக்கும்கச்சேரிதாரகை இலாகாக்குமிடையே நடைபெற்ற போட்டியில் கல்வி இலாகா 2—1 ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளது.

மத்தியஸ்தராக திரு. ஐயம்பிள்ளை கடமையாற்றினர்.

## முருங்கன் வீரர் வெற்றி

மன்னர், வெள்ளி

மன்னர் அரசாங்க உல்லாச விளையாட்டு அங்கத்தவருக்கும் முருங்கன் விளையாட்டு வீரருக்குமிடையேயான உதைபந்தாட்டப் போட்டி மன்னர் புனிதசவேரியார் விளையாட்டுத் தளத்தில் நடைபெற்றது.

முருங்கன் பகுதி வீரர்கள் துரிதமாகவும் நுட்பமாகவும் விளையாடி 13 கோல்களைப் போட்டு வெற்றிபெற்றனர்.

அரசாங்க உல்லாச விளையாட்டு அங்கத்தவர் ஒரு கோலும் போடவில்லை.

டாக்டர் கே. நடராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி வாலிபர் கழகத்தினரால் உதைபந்தாட்டப் போட்டி, கைப்பந்தாட்டப் போட்டி, தாச்சிப்போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லியடி விளையாட்டுக் கழகம், வதிரி பொபஸ் கழகம் ஆகிய கழகங்களும், கைப்பந்தாட்டப் போட்டியில் வல்வெட்டித்துறைக் கோஷ்டியும், தாச்சிப் போட்டியில் துன்னாலை 'சூட்டிங் ஸ்ரார்ஸ்' கழகமும் இவ் வருடத்தின் சாம்பியனகத் தெரிவுசெய்யப்பட்டு முறையே 'ஈரோகேடயம், செல்லம்ஸ் கேடயம், 'சேர்மன்' கேடயம் ஆகிய கேடயங்களைப் பெற்றன.

கைப்பந்தாட்டப் போட்டியில் 'ரன்னேஸ் கப்' சித்திராங்கன் கோஷ்டியும், தாச்சிப் போட்டியில் நெல்லியடி பாரதி கோஷ்டியும் பெற்றன.

காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் திரு. குணவர்த்தன வெற்றிபெற்ற சழகங்களுக்குக் கேடயங்களை வழங்கினர்.

## கைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

அவ்வாய் மனோகராவுக்கும் மேற்கரவை விக்னேஸ்வராவுக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் விக்னேஸ்வராவும், வதிரி டைமன் கோஷ்டிக்கும் விக்னேஸ்வராவுக்கும் நடைபெற்ற ஆட்டத்தில் டைமனும், நெல்லியடி விளையாட்டுக் கழகத்திற்கும் விக்னேஸ்வராவுக்கும் நடைபெற்ற போட்டியில் சமமான புள்ளிகளையும், வதிரி பொம்பஸுக்கும் விக்னேஸ்வராவுக்கும் நடைபெற்ற ஆட்டத்தில் பொபஸும், மனோகராவுக்கும் நெல்லியடிக்கும் நடைபெற்ற போட்டியில் நெல்லியடியும், மனோகராவுக்கும் டைமனுக்கும் நடைபெற்ற விளையாட்டில் டைமனுக்கும், பொம்பஸுக்கும் நடைபெற்ற ஆட்டத்தில் இரு பகுதியினரும் சமமாகவும், டைமனுக்கும் நெல்லியடிக்கும் நடைபெற்ற கடும் மோதலில் நெல்லியடியும் வெற்றிகள் பெற்றன.

## சைக்கிளில் இலங்கை வலம்

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நீ. நவரத்தினம், சி. செல்லத்துரை, யேசுதாசன், சு. விஜயகுமார் ஆகிய நான்கு இளைஞர்களும் அடுத்த மாதம் 10-ந் திகதி முதல் இலங்கையைச் சைக்கிளில் சுற்றி வருவதற்குரிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்து வருகின்றார்கள். கரவெட்டி வடக்கு கிராம சேவையாளர் திரு ஆ. தாமோதரம்பிள்ளை தலைமையில் ஆரம்பமாகும். கரணவாய் வடக்கு கிராம சேவையாளர் திரு. சு. க. சுப்பிரமணியம் சுற்றுப்பிரயாணத்தைத் தொடக்கி வைப்பார் என அறிவிக்கப்பட்டது.

## முள்ளியவளையில் முத்தமிழ் விழா

முள்ளியவளை, வியாழன்

முள்ளியவளை இயல், இசை நாடகக் கலாமன்ற 16-வது ஆண்டு விழாவையொட்டி முத்தமிழ் விழா வெள்ளிககிழமை ஆரம்பமாகிமூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. முள்ளியவளை சைவ வித்தியாசாலை அரங்கில் இவ் விழா நடைபெறவிருக்கிறது. முதல் நாள் வவனியா எம். பி. திரு. டி. சிவசிதம்பரம், இரண்டாம் நாள் வவனியா மாவட்ட அதிபர் திரு. பி. எச். பிரேமவர்த்தன, மூன்றும் நாள் கலாநிதி சு. வித்தியானந்தன் ஆகியோர் தலைமையில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற விருக்கின்றன. சொற்பொழிவுகள் இசைநிகழ்ச்சிகள் என்பன நடைபெறவிருக்கின்றன.

## சமாதான நீதிபதி

யாழ்ப்பாணம், வெள்ளி

அச்சுவேலியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ஜீ. வி. பாலசிங்கம் நீதிபதி திரு, நைல்ஸ் முன்னிலையில் சமாதான நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## பெண்கடத்து வழக்கில் எதிரி விடுதலை

கொழும்பு, வியாழன்

பதினறு வயதுள்ள சோமாவதி என்னும் பெண்ணை கடத்திச்சென்றதாக குற்றஞ்சாட்டி சாந்தி ஜெயதிலகா மீது கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபது திரு. டி. கியு. எம். சிறிமானே முன்னிலையில் தொடரப்பட்டவழக்கின், விசாரணை முடிவில் நீதிபதி எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

தீர்ப்பளிக்குமுன் சோமாவதியிடம் நீதிபதி கூறியதாவது:-

"பதினறு வயதைக் கடந்த பெண்ணுக நீ இருப்பதால், எப்படி நடக்கவேண்டும் என்று உனக்கு தெரியவேண்டும். நீ பழகுகிறவர்களிடம் கவனமாக இருக்கவேண்டும். எதிரிதான் உன்னை மணப்பதாக வாக்குறுதியளித்ததை தற்பொழுது மறுக்கிறார். நீ செய்யவேண்டிய நல்லகாரியம், எதிரியை மறந்துவிட்டு, உனது எஜமானரிடம் சென்று வாழ்க்கையில் நல்லமுறையில் வாழ முயற்சிசெய்."

மாளிகாகந்தையைச் சேர்ந்த பதினறுவயதுள்ள சோமாவதியை, குமாஸ்தா வேலைபார்க்கும், அவரது அயலவரான சாந்தி ஜெபதிலகா என்னும் வாலிபர், கடத்திச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மாளிகாகந்தையை சேர்ந்த திருமதி எம். பெரோ என்பவர், அவரது பாதுகாப்பிலிருந்த சோமாவதியை காணவில்லையென்று பொலிஸாருக்கு புகார் செய்ததை தொடர்ந்து இருவரும் கைதுசெய்யப்பட்டு, நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டார்கள்.

திருமதி பெரேரா சார்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரி திருமணஞ் செய்வதாக வாக்குறுதியளித்ததின் பேரில்தான், பெண் அவருடன் சென்றார் என்றும், திருமணம் ஒழுங்கு செய்வதற்கு அவகாசம் கொடுக்கும்படியும் கூறினர். ஆனல் எதிரி சார்பில் ஆஜரானவழக்கறிஞர், திருமணஞ்செய்வதாக பெண்ணுக்கு எதிரி வாக்குறுதியளிக்கவில்லையென்று தெரிவித்தார்.

சோமாவதிக்கு 16 வயது கடந்துவிட்டதால், இவ்வித குற்றம் சாட்டப்படக்கூடாதென தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

## பஸ் சேவை மாறுதல்

### மண்டைதீவு மக்கள் கவலை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைப போக்குவரத்துச்சபை அலுவலகம் மண்டைதீவுக்கான பஸ சேவையில் திடீரென மாறுதல் செய்ததைத் தொடர்ந்து பிரயாணிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள்.

ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவையாக சேவை செய்து வந்த மண்டைதீவு பஸ் சேவையில் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து மாறுதல் செய்யப்பட்டுள்ளது. காலை 6 மணிக்கும், 7-15 மணிக்கும் வழமையாக இருந்துவந்த இரண்டு சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. காலை 5-30 மணிக்குப் பின் காலை 8-30 மணிக்குத்தான் அடுத்த பஸ் புறப்படும். இதற்குட்பட்ட இரு சேவைகளிலும்தான் பிரயாணிகள் பிரயாணஞ் செய்வது அதிகமாகும். காலையில் வர்த்தகர்கள், வேலையாட்கள், உத்தியோகஸ்தர்கள் பிரயாணஞ் செய்வர். இரு சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளதனல் பிரயாணிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள்.

இதனை உடனடியாகக் கவனிக்கும்படி மண்டைதீவு இளைஞர் முன்னேற்றக் கழகம், வாலிப முன்னணி, கிராம முன்னேற்றச் சங்கம் என்பன வட பிரதேச முகாமையாளருக்கும், ஊர்காவற்றுறை எம். பி.க்கும், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளன.

பரந்தன்

## ரசாயன கூட்டு ஸ்தாபனத்துக்கு சில்வா இடமாற்றம்

கொழும்பு, வெள்ளி

இலங்கை பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனத்தின் முன்னாள் ஜெனரல் மனேஜரான திரு. சாம் சில்வா பரந்தன் ரசாயன கூட்டு ஸ்தாபனத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனத்திலிருந்து விலக்கப்பட்டபின் திரு. சில்வா திறைசேரியில் கடமையாற்றிவந்தார்.

## சாம்ராஜ்ய வர்த்தக மந்திரிகள் மகாநாடு

லண்டன், மே 15

சாம்ராஜ்ய வர்த்தக மந்திரிகள் தமது இரு நாள் மகாநாட்டை லண்டன் மல்பரோ இல்லத்தில் ஐரோப்பிய நிலைமையின் சூழ்நிலைக்கு எதிராகவும், ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மகாநாடு பற்றிய விவாதம் நடைபெற்றபின், முடித்தனர்.

மகாநாட்டிற்குத் தலைமை வகித்த வர்த்தக சபைத்தலைவரான திரு. பிரட்ரிக் ஈரோல் கூட்டங்களைப்பற்றிக் கூறுகையில் "சாம்ராஜ்ய வர்த்தக ஆர்வம்" சாம்ராஜ்ய வர்த்தகத்தினுள்ளும்; உலக வர்த்தக விரிவிலும் தான் தங்கியிருக்கிறது.

"இயற்கையாகவே ஒவ்வொரு மந்திரியும் தனது நாட்டின் தேவைகளையும் ஆர்வத்தையுமே சுட்டிக்கூறுவர். ஆனலும் மற்ற சாம்ராஜ்ய நாடுகளின் பிரச்னையை உணரும் பொதுவிருப்பம் அனைவரிடமும் காணப்பட்டது. உலகின் பொருளாதார, வர்த்தக கஷ்டங்களுக்கு எடுக்கப்படும் செய்முறை முன்னேற்றத்தை நாம் விரும்புகிறோம் விசேஷமாக இம்முறை ஜெனிவாவில் நடைபெறவிருக்கு ஹட் மகாநாட்டில் விவாதிக்கப்படும். "சுருக்கமாகக் கூறினல் சாம்ராஜ்ய நாடுகள் பொது அறிவைத்தான் நம்புகிறது" என்று கூறினர்.

மகாநாட்டின் இறுதியில் பிரசுரிக்கப்பட்ட கூட்டு அறிக்கையில் சாம்ராஜ்யத்திலுள்ள வர்த்தக விருத்திக்கும் உலக வர்த்தக விரிவிற்குமான குறிப்புகள் குறிக்கப்பட்டிருந்தன. மந்திரிகள் யாவரும் "கென்னடியின் சுற்று வர்த்தக பேச்சு வார்த்தைகளை வரவேற்றனர். இதில் சகல சாம்ராஜ்ய அரசாங்கங்களும் செயலாற்றக் கூடிய கடமையை ஏற்கத் தீர்மானித்துள்ளன.

கூட்டு அறிக்கையில் மற்ற இரு பிரதம குறிப்புகள் வருத்தியடையும் நாடுகளை சுட்டிக்கூறுகின்றன. கைத்தொழில் விருத்தியடைந்த நாடுகளால் தமது உற்பத்திகளை கட்டுப்படுத்தப்படுத்தியமையால் ஏற்பட்ட பிரச்னைகளைத் தீர்க்கும் சேவையையும், சுங்க வரிகளை அழித்து அல்லது குறைத்து தமது வர்த்தகத்திற்கு உதவிசெய்யும் முக்கியத்துவத்தையும் காட்டியுள்ளன.

அடிப்படை உற்பத்திகளினதும் மூலப்பொருட்களினதும் விலைகளின் அழிவு கடந்த 10 வருடங்களாக குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இந்நிலைமையின் முன்னேற்றம் விருத்தியடையாத நாடுகளினதும் வெட்ப தட்ப விவசாயத்திற்குரிய உற்பத்திகளையும், மூலப்பொருள்களையும் ஏற்றுமதி செய்யும் நாடுகளினதும் பிரச்னைகளைத் தீர்க்க உதவி புரியும்.

# சிங்களத்தில் திருத்தம் அனுப்பவேண்டும்?

## வாக்காளர் பட்டியல் சிங்களத்திலேயே உள்ளது

கொழும்பு, வியாழன்

இவ்வாரம் சிங்களத்தில் அனுப்பப்பட்ட பாராளுமன்ற இடாப்பில் உள்ள வாக்காளர் பட்டியலின் பிரதிகளை, சிங்களம் தெரியாத ஆயிரக்கணக்கான வாக்காளர்கள், சிங்களத்தில் திருத்தி அனுப்பவேண்டியநிலைஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற வாக்காளர் இடாப்பிலிருந்து எடுக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர் பட்டியலின் பிரதிகள் இதற்கான படிவம் ஒன்றில் இணைக்கப்பட்டு இவ்வாரம் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பெயர்கள் சிங்களத்தில் மட்டும் உள்ளன. இந்தப் பட்டியலில் என்ன செய்யவேண்டும் என்ற விபரங்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் உள்ளன. இதன் மூலம் பட்டியல்கள் சிங்களத்தில் திருத்தி அனுப்பப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் விடுபட்ட பெயர்கள், பிழையான பெயர்கள், சேர்க்கப்படாத பெயர்கள் ஆகிய பிழைகள் எதுவும் இருப்பின் அதைக் குறிப்பிட்டு, அவ்வப்பகுதி தேர்தல் தொகுதி பதிவு உத்தியோகஸ்தருக்கு தெரிவிக்க வேண்டும். பாராளுமன்ற வாக்காளர் இடாப்பு பதிவு வேலைகள் பதிவாளர் கந்தோரிலும், மற்றும் கச்சேரிகளிலும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகின்றன.

### கைதிகள் விடுதலை

வாஷிங்டன், மே 16

நாளை 160 இந்தியக் கைதிகளையும்வருகிற 20-ம் திகதி498 கைதிகளையும் சீன விடுதலை செய்யும் என அறிவிக்கப்படுகிறது.

### புதிய அஸைஸ் கமிஷனர்

கொழும்பு, புதன்

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வி. சிவசுப்பிரமணியம் அசைஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் இருபத்தேழாம் திகதி ஆரம்பமாகும் சுப்ரீம் கோர்ட் கொலை வழக்கு விசாரணைகளுக்கு தலைமைவகிப்பார்.

### புகையிரத விபத்துக்கு எவரும் பொறுப்பல்ல

—ரம்பாலா

கொழும்பு, வியாழன்

சென்ற சனிக்கிழமை மதவாச்சிக்கும்- அனுராதபுரத்திற்கும் இடையில் நடைபெற்ற புகையிரத விபத்தால் ஏற்பட்ட சேதம் ஒன்றரை லட்சம் ரூபாவிற்கு மதிப்பிடப்பட்டுள்ளது.

புகையிரதப் பகுதி ஜெனரல் மனேஜர் திரு. ரம்பாலா விபத்து பற்றி இன்று காலை தெரிவிக்கையில் புகையிரதப் பகுதி ஊழியர்கள் எவர்மீதும்ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார். இவ்விபத்துக்கு எவரும் பொறுப்பல்லவென்றும், வாகனின் சில்லு ஒன்று புகையிரதப் பாதையை விட்டுச் சறுக்கியதே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

# மந்திரிசபையில் மாறுதல் ஏற்படலாம்

## புதிய ஓர் அமைச்சு நிறுவப்படும்?

கொழும்பு, வியாழன்

மந்திரி சபையில் எந்த நேரமும் மாற்றம் ஏற்படலாம் என அரசியல் வட்டாரங்களில் ஹேஷ்யம் கூறப்படுகின்றது. திரு. ஏ. பி. பெரேரா நிதிமந்திரியாக நியமிக்கப்படலாம் எனவும் இவ் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

நிதிமந்திரி, போக்குவரத்து மந்திரி ஆகிய முக்கிய பதவிகளை ஒருவரே வகிப்பது திருப்திகரமற்றதென்றும், பொருளாதார சிக்கல் ஏற்பட்டுள்ள இந் நிலையில் நிதிமந்திரி பதவி ஒரு முழு நேரப் பதவியாக இருக்கவேண்டுமெனவும் அரசாங்க வட்டாரங்களில் கருதப்படுவதாலேயே விரைவில் மந்திரி சபையில் மாற்றம் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு எம். பி. யை பிரதமர், நிதிமந்திரியாக நியமிப்பதில் சட்டரீதியாகத் தடை எதுவும் இல்லையென அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறப்பட்டதாகவும் தெரியவருகிறது. புதிய மந்திரிசபை ஒன்று அமைக்கப்பட்டால் பொருளாதார அபிவிருத்தி திட்ட அமைச்சு ஒன்று புதிதாக நிறுவப்படலாம் என்றும் அதற்கு திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவின் பெயர் குறிப்பிடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

### ஆனந்தனின் கால்நடை யாத்திரை

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்வெட்டித்துறை 'புளூஸ்' விளையாட்டுக் கழக வீரர்களான திருவாளர்கள் ஏ. எஸ். இராஜேந்திரன், வி. முருகதாசன், எஸ். யோகச்சந்திரன், வி. கார்த்திகேசன் ஆகியோர் நீச்சல் வீரன் ஆனந்தன் தலைமையில் கொழும்புக்கு கால் நடையாகச் செல்லவிருக்கின்றனர்.

இம்மாதம் 28-ம் திகதி கொழும்பில் மேற்கு ஜெர்மனிக்கும் இலங்கைக்குமிடையே நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டத்தைப் பார்பதற்காகவே இக்கோஷ்டியினர் கொழும்பு செல்லவிருக்கின்றனர். 250 மைல் தூரத்தையும் இக் கோஷ்டியினர் ஆறு தினங்களில் நடந்து செல்ல முடிவு செய்துள்ளனர். இக் கோஷ்டியினர் இம்மாதம் 20-ம் திகதி காலை வல்வை சனசமூக நிலையத்திலிருந்து புறப்படுவார்கள் எனத்தெரிகிறது.

### சத்தியமூர்த்தி சிலையை நேரு திறந்துவைப்பார்

சென்னை, மே. 16

அடுத்த மாதம் 12-ம் திகதி திரு. நேரு, சென்னை வருகிறார். மரீனக் கடற்கறையில் அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவார். 14-ம் திகதி காலஞ்சென்ற தமிழ்நாட்டுத் தலைவர் திரு சத்தியமூர்த்தியின் உருவச்சிலை ஒன்றை நேரு திறந்துவைப்பார்.

### சோஷலிஸ அரசாங்கம் இடதுசாரிகளால் தான் முடியும்

—என். எம்.

எட்டியாந்தோட்டை, வியா

"நாட்டு மக்கள் உண்மையானதோர் சோஷலிஸ அரசாங்கத்தை அமைப்பதில் மிகவும் அக்கறையும் திடசங்கற்பமும் கொண்டுள்ளார்கள்" என மத்தமகொட என்னுமிடத்தில் லங்கா சமசமாஜ இளைஞர் முன்னணிக் கூட்டமொன்றில் பேசுகையில் டாக்டர் என். எம். பெரேரா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: 'தற்போதைய அரசாங்கம் எல்லாவகை வசதிகளையும் மக்கள் மீது சுமத்தியதின் பயனாக ஏழைமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி மட்டுமே இந்த நாட்டுக்குகந்தவோர் சீரான அரசாங்கத்தை அமைக்கும் வல்லமையுடையது. அதுவே உண்மையான சோஷலிஸ அரசாங்கமாக அமையும் அந்த அரசாங்கமே இன்று நாட்டிலுள்ள இலஞ்ச ஊழல்கள், சுரண்டல்கள் யாவையும் நீக்கவல்லதாகும்"

நாட்டிற்கு இளைஞர்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய உயர்ந்த கடமையை உணர்ந்து தேர்தல்வரும்போது கவனமாக அவர்கள் செயலாற்ற வேண்டுமென்றும் தனது பேச்சில் டாக்டர் என். எம். பெரேரா கேட்டுக்கொண்டார்.

### ஆயுள்வேதசுகாதார கவுன்சில் தெரிவு

கொழும்பு, வியாழன்

ஆயுள்வேத சுகாதார கவுன்சில் அங்கத்தினர்களாக திருவாளர்கள்: எம். ஜி. ஐ. குணதிலகா, ஜயதிலகா, சிரிபால வீரவர்த்தன ஆகிய மூவரும் தெரிவுசெய்யப்பட்டனர். 430 ஆயுர்வேத வைத்தியர்கள் தபால் மூலம், இத் தேர்தலில் வாக்களித்தனர். போட்டியிட்டவர்கள் மொத்தம் 12 பேர்.

### மீண்டும் தாக்குதல்

ஜாகர்த்தா, மே 16

ஜாகர்த்தாவுக்கு 40 மைல் தெற்கே கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் சீன எதிர்ப்புக்கிளர்ச்சி நடைபெற்றது. 18 சீனரின் கடைகள் தாக்கப்பட்டன. இதுசம்பந்தமாக 20 இந்தோனேஷிய இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

### பயிற்சியளிக்க மகாநாடு

தொல்புரம், வியாழன்

இளம்பிள்ளை வாதத் தடுப்புஇயக்கம் வெற்றியளிப்பதற்காக தொல்புரம் கிராம முன்னேற்றச் சங்க, மத்திய சனசமூக நிலையங்களின் ஆதரவுடன், வட்டார சுகாதாரப் பரிசோதகர், தொல்புரம், சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களிலுள்ள தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மகாநாடுஒன்றைசனிக்கிழமைதொல்புரம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்.

### சக்கரம் கழன்றது சாரதியின்சாதுரியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு முன்னால் இ. போ. ச. பஸ் ஒன்று சென்றுகொண்டிருக்கும்போது பஸ் வண்டியின் முன்சக்கரம் கழன்றது. சாரதி சாதுரியமாகப் பஸ்ஸை நிறுத்தி பிரயாணஞ் செய்தவர்களுக்கு எவ்வித அபாயமுமின்றிக் காப்பாற்றினர்.

### சீனத் தலைவர் தாயகம் புறப்பாடு

ஹானொய், மே 16

சீனக் குடியரசுத் தலைவர் திரு. லியூஷாசீயும், வெளிநாட்டு மந்திரி திரு. சென்யீயும், வடவியட்னமிலிருந்து பீகிங்குக்குப் புறப்பட்டுச்சென்றனர். வடவியட்னம் அதிபர் ஹோசிமின்னுடன அவர்கள் நடத்திய சம்பாஷணை பற்றி கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

### பனிப்புலம் அம்மன்கோவில் உற்சவம்

சுழிபுரம், வியாழன்

பனிப்புலம் முத்துமாரி அம்மன் கோவில் உற்சவம்15-5-63 புதன்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் அலங்காரத் திருவிழா நடைபெற்று 24-5-63 வெள்ளிக்கிழமை தேர் திருவிழா நடைபெறும்.

### மீன்பிடித் தொழில் நிறுத்தப்பட்டுள்ளது?

மன்னர், வியாழன்

மன்னரில் சமீப காலமாக டைனமட் வைத்து மீன் பிடித்து சீவனம் செய்த தொழிலாளர்கள் அண்மையில் நடந்த பயங்கர விபத்தில் இருவர் பலியானதை முன்னிட்டும், அரசாங்க அதிபரின் உத்தரவாலும் மீன்பிடித்தலை நிறுத்தி வைத்திருக்கின்றனரெனத் தெரிகிறது.

### ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

தபால் இலாகாவில் 35 வருடங்கள் தபால் தந்திப்போக்குவரத்துப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. ஏ. யோசப் இம்மாதம் முதல் ஓய்வுபெற்றுள்ளார் ஓய்வு பெறுவதற்கு முன்னர் இவர் யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோரில் தபால் தந்திப் போக்குவரத்துப் பரிசோதகராகக் கடமையாற்றினர். இவர் 1928-ம் ஆண்டு இவ் வேலையில் சேர்ந்தார். இவருக்கு இப்பொழுது 59 வயதாகும்.


வெற்றிகரமான 3-வது வாரம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை!



சிவாஜி கணேசன்
S. S. ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா

நடித்த

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனோகரா (யாழ்ப்பாணம்)

என். டி. ராமராவ் லக்ஷ்மி ராஜயம் நடித்த

வேலைக்காரி மகள்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மே மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.